அருளாளர் நூல் வரிசை - 2

120

# ஆதிசங்கரர்



தமிழக அரசு விருது பெற்ற

## பாபநாசம் குறள்பித்தன்

# திரு ஆதிசங்கரர்

தமிழக அரசு விருது பெற்ற

**பாபநாசம் குறள்பித்தன்**

நிவேதிதா
புத்தக பூங்கா

■ **திரு ஆதிசங்கரர்** ■ வாழ்க்கை வரலாறு ■ **பாபநாசம் குறள்பித்தன்** ■ முதல் பதிப்பு 2007 ■ பதிப்பாளர்: **எஸ்.ஆர்.சுவாமி நாதன்**, நிவேதிதா புத்தகப் பூங்கா, எண்.14, இரண்டாம் தளம், பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 14 கைபேசி: 98847 14603 ■ ஓவியம் & அட்டை வடிவமைப்பு: **சித்தன் கலைக்கூடம்**,சென்னை-35, அலைபேசி:93827 08030 ■ ஒளி அச்சு: குகன் கம்ப்யூட்டர்ஸ், சென்னை-8 ■ அச்சாக்கம்: பதிப்பக நண்பன், சென்னை - 14■

**பக்கங்கள் : 64**

**விலை ரூ.25.00**

■**Thiru Aadhisankarar** by **Kural Pithan** ■First Edition-2007 ■ Published by **S.R.Swminathan**, Nivethitha Puthaka Poonga. No.14, IInd Floor, Peters Road, Royapettah, Chennai - 14 Mobile: 9884714603 ■Illustration & Wrapper designed by: **Chithan Kalaikoodam**,Chennai-35 Mobile: 9382708030 ■Type Setting by: Guhan Computers, Chennai-8 ■Printed by Pathippaga Nanban, Chennai -14 ■

## ஞானவிளக்கேற்றிய ஒளிச்சுடர்...

ஒவ்வொரு நூற்றாண்டிலும் இந்தப் பிரபஞ்சம் பல லட்சம் மனிதர்களைப் படைக்கிறது. அதில் ஒரு சிலர்தான் மகோன்னதம் மிக்கவர்களாய் அருள் மகுடம் அணிகிறார்கள். அவ்விதம் இம்மண்ணில் விளைந்த ஆன்மீக வைரமணிதான் நம்முடைய ஆதிசங்கரர்.

பசுமையும், ஈரப்பசையும் பின்னிப்படர்ந்த கேரள தேசத்தில் பிறந்து இந்தப் பூவுலகிற்கே தத்துவ தரிசனம் தந்தவர் ஆதிசங்கரர். காலடி என்ற சிற்றூரில் பிறந்து உலகம் கொண்டாடும் சிருங்கேரி மடத்தை ஸ்தாபித்த பெருமகனார் இவர்.

அந்த ஞான விளக்கேற்றிய ஒளிச்சுடரை எளிய தமிழில் வாசகர்களுக்குத் தந்திருக்கிறார் எழுத்துச் சித்தர் பாபநாசம் குறள்பித்தன் அவர்கள். படித்த மனம் இன்புறுவது மட்டுமே நல்ல எழுத்துக்கு அடையாளம் அல்ல. அந்த எழுத்து ஒரு சிறு விதையையாவது படிப்போரின் நெஞ்சகத்தில் விழச்செய்ய வேண்டும். அந்த விரல் வித்தை தெரிந்த நாடறிந்தவர் எழுத்து வேந்தர் பாபநாசம் குறள்பித்தன் அவர்கள். அவரின் எழுத்தின் வழியே 'நல்லன விதைக்கிறோம்' என்கிற நெஞ்சார்ந்த மன நிறைவு எய்துகிறது எங்களுக்கு.

ஆன்மீகப் பெருமகனார்களின் வரலாற்றை இன்றைய வாசக உள்ளங்களுக்கெல்லாம் கொண்டு செல்லும் எங்களின் பேரவாவின் சீரிய முயற்சியின் சிறிய தொடக்கம்தான் இந்தப் புத்தகப் பூந்தோட்டம்.

சாதாரண மனிதராய்... ஊறத்துவங்கி சரித்திரப் புருஷர்களாய் மாறுபவர்கள் சிலர் உண்டு.

பிறக்கும்போதே... பிறவிப் பிரகாசமாய் ஒளி உமிழ்ந்து வரலாற்றின் நெடிய பக்கங்களில், மற்றவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாய் வாழ்ந்தவர் சிலர் உண்டு.


இதில், இரண்டாம் வகையைச் சேர்ந்தவர் அருட்பிரகாச ஆதிசங்கரர்.

படியுங்கள்... அருள் அமுதம் பருகுங்கள்!

அன்புடன்

எஸ்.ஆர். சுவாமிநாதன்.

**முனைவர் ஆ.பாலன்,**
முன்னாள் துணை முதல்வர்,
தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.



## வாழ்த்துரை

எழுத்துலகில் இணையற்ற பேராசிரியராக விளங்கி வருபவர் பாபநாசம் குறள்பித்தன் ஆவார். துள்ளும் இளமைப் பருவங்காலந் தொட்டே தன் உள்ளத்தில் குதித்து எழும்பும் கவிதை வரிகளை பிறர்மேல் அள்ளித் தெளித்து உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஆற்றல் மிக்கவர். தனித்திறமை பெற்றவர். எத்தகைய கருத்துக்களையும் எடுத்துச் சொல்வதில் தளராத நெஞ்சினர். தன்னம்பிக்கை மிக்கவர். இவரின் எழுத்தாற்றல் தனிப்பெரும் தன்மையுடையது. சிறப்பும் பொலிவும் பெற்றது. இதற்குத் தக்கசான்று இவர் எழுதியுள்ள ஆதிசங்கரர் என்ற நூலே எடுத்துக்காட்டாக அமையும்.

அத்வைத மதத்தின் ஆணிவேராகக் கருதப்படுவர் ஆதிசங்கரரே ஆவார். அவருடைய வாழ்க்கை வரலாற்றை முறையாக வடிவமைத்துத் தரவேண்டும் என்ற எண்ணத்தில் நூலாசிரியர் ஈடுபட்டு அதில் வெற்றியும் பெற்றுள்ளார். இதுவரை ஆதிசங்கரரைப் பற்றி வெளிவந்துள்ள நூல்களில் இதுவே தெளிவாகவும் திருத்தமாகவும் அதே சமயத்தில் சுருக்கமாகவும் அமைந்துள்ளது. பலதரப்பட்ட நூற்களைப் படித்துப் பார்த்து, அவற்றிலிருந்து செய்திகளைத் திரட்டித் தொகுத்துத் தருவதில் இவருக்கு நிகர் இவரே என்பதை, ஆதிசங்கரர் என்ற இந்த நூலே நன்கு உணர்த்தும்.

படிப்பவர்களுக்குச் செய்திகளை இன்சுவைத் தேனாக தருவதில் வல்லவர். ஆதிசங்கரர் என்ற இந்த நூலில் பதினாறு தலைப்புக்கள் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் இன்சுவைத் தேன் என்பதில் ஐயமில்லை. அவற்றுள் பாசத்தேன் மிக்கதாக உறவு துறவு என்ற தலைப்பு அமைந்துள்ளது. இதில் தாய்ப்பாசம் படும்பாடு, மிகவும் மனவேதனை தரக்கூடியதாக உள்ளது.

மாலைப் பொழுதில் நறுமஞ்சள் அரைத்தே குளித்து வேலை மினுக்கிட்டு விழித்திருந்து சூலாகி பெற்றாள்; வளர்த்தாள்; பெயரிட்டாள்; பெற்ற பிள்ளை பித்தானால் என் செய்வாள் பின் - என்ற பட்டினத்தார் பாடலே அப்போது என் நினைவிற்கு வந்தது. நல்லமுறையில் பாசம் சொட்டச் சொட்ட எழுதியுள்ளார்.

'தன் ஆசான் தன்னொடு கற்றோன் தன் மாணாக்கன் தகும் உரைகாரன் என்று இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே' என்று நன்னூல் இலக்கணம் கூறும் கொள்கைக்கு ஏற்ப, பாபநாசம் குறள்பித்தன் அவர்கள் தமிழ்க்கல்வி, பயின்ற கல்லூரியில் ஆசிரியனாக நான் பணியாற்றி அவருக்கும் பாடம் சொல்லிக் கொடுத்த அந்தக் காலத்தை நினைத்து இந்தக் காலத்தில் அவருக்கு, அவர் இயற்றிய நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ளேன்.

எழுபதிற்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டு எழுத்துலகில் இணையற்ற பேராசிரியராய்ப் புகழ் பெற்று விளங்கும் பாபநாசம் குறள்பித்தன் அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து மென்மேலும் படைப்பாற்றல் மிக்கவராய்த் திகழ வேண்டும். இவரின் மிகச் சிறந்த நூல்களில் ஒன்று. 'ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மேதை' என்பதாகும். இது மிகவும் அரிய பெரிய முயற்சி என்பதைப் படித்தவர் அனைவரும் அறிவர். இனிவரும் காலங்களில், இவர்தான் மேதை - என்ற நூல் பாபநாசம் குறள்பித்தனைப் பற்றி வெளிவர வேண்டும். இதுவே என் அக நினைவு. அது நனவாக வேண்டும். ஆதிசங்கரர் புகழ் நிலைத்திருப்பது போல், பாபநாசம் குறள்பித்தன் அவர்கள் புகழும் நிலைத்து ஓங்கி திகழவேண்டும்.

**- முனைவர் ஆ.பாலன்**

## என்னுரையாக....

ஆன்மிகத்தையும், அறிவியலையும் ஒவ்வொரு மனிதரும் அறிந்து கொள்ள வேண்டும். இல்லை, அறிந்து கொள்ள முயல வேண்டும். அப்போதுதான், அவர்களது வாழ்க்கை சீர்படும்; சிறப்பும் படும்.

ஆன்மிக அறிவு; அகவாழ்வை அமைதிப்படுத்தும்; அழகுபடுத்தும்; நெறிப்படுத்தும்.



பாபநாசம்
குறள்பித்தன்

அறிவியல் அறிவு, புறவாழ்வை பூரணமாக்கும், புதுவழி காட்டும்.

ஆன்மிகத்தில்; அறிவியலும் அடக்கம் என்பதை நமது வேதங்களும், புராணங்களும், சாஸ்திரங்களும் வரிக்கு வரி, வார்த்தைக்கு வார்த்தை மெய்ப்பித்துக் காட்டியிருக்கின்றன. காட்டிக் கொண்டும் இருக்கின்றன.

இவ்விரு சக்திகளையும் பெற்ற எந்த நாடும் உயர்ந்து விடும்; இதுவே உண்மை.

ஆன்மிக கருத்துக்களை அறிந்து கொள்வதில் தற்போது இளைஞர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள் என்பதை அறிய மகிழ்வாக இருக்கிறது.

அதே நிலையில், அவர்கள் எளிதாக அறிந்து கொள்கிற - புரிந்து கொள்கிற நிலையில், நம் குருமார்களின் கருத்து களைப் பற்றிய வரலாறுகளையும் எளிமையாக - இன்றைய எழுத்தாளர்கள்

எழுதிடவில்லை என்ற குறைபாட்டினையும் இளைஞர்கள் சொல்ல நான் கேட்டு வருகிறேன்.

எழுதுபவர்கள், அவர்களின் மேதா விலாசத்தை காட்டுவதற்காகவே வடமொழியில் உள்ளது போல் உள்ள படியே ஸ்லோகங்களை இடையிடையே போட்டு எழுதுவதால்தான் பலர் ஆன்மிக நூல்களையே தொட்டுக்கூட பார்ப்பதில்லை என்ற கருத்தும் இங்கே உண்டு.

வேண்டுமானால், நூலகம் சென்று பாருங்கள், ஆன்மிக நூல்கள் புத்தம் புதிதாகவே இருக்கும்!

இதை நான் அறிந்த காரணத்தால்தான், அருள் வடிவான ஆதிசங்கரரின் வாழ்க்கை வரலாற்றினை இயன்றவரை எளிமையாக எழுதியிருக்கிறேன்.

இந்நூலிற்கு - என்னை வழிநடத்துபவரும் என் வளர்ச்சியிலும், மலர்ச்சியிலும், மனம் பதித்துள்ள என் குருநாதர், கரந்தைப் புலவர் கல்லூரியின் முன்னாள் உதவி முதல்வர் **திருமிகு ஆ.பாலனார்** அவர்கள் நல்லதொரு வாழ்த்துரையினை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு மாணவனாகி நான் என்ன செய்ய இயலும்...?

தற்போது எனது நெஞ்சார்ந்த நன்றியினை மட்டும், இங்கே பதிவு செய்கிறேன்.

என் நிலையறிந்து என்னை மேன்மைப்படுத்தும் வகையிலே என் எழுத்துக்களை இதயத்தால் என்றும் நேசிக்கும் பதிப்பக உரிமையாளர் அவர்களுக்கு என் வணக்கமும், நன்றியும்.

எப்போதும்போல் என் எழுத்திற்கும், இதயத்திற்கும் துணை நிற்கின்ற உயிர்த் துணைவியார் **நீலா கண்ணன்** அவர்களுக்கு, நன்றி!

**பாபநாசம் குறள்பித்தன்**

13/1, 2-வது குறுக்குச்சந்து,
வெள்ளாளர் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.
கைபேசி: 94444 54335



# திரு ஆதிசங்கரர்

**கே**ரளாவிலுள்ள காலடியில் கண்விழித்த கருணை வள்ளல்; கால்நடையாகவே இந்தியா முழுதும் ஆன்மிகப் பயிர் வளர கார்மேகமாய் உலவிய புனித நீர்.

அன்பே வடிவான; அறிவே நிறைவான;

அருளே திருவானவர், திரு ஆதிசங்கரர்.

உலகம் முழுதுமே பௌத்த மதம் தோன்றி நிலை பெற்றுக் கொண்டிருந்த வேளையில் நமது இந்துமத வேதாந்த, கொள்கை களை நிலை நாட்டியவர், இவரே!

இம்மகான், வேதத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்று வித்ததே அத்வைதமாகும்.

இனி இம்மகானைத் தொடரலாம்.....

□

# 1. ஆண்டவன் அருள்!

ஈரநாடு என்று கேரளாவைச் சொல்லலாம். இச்சிறப்புமிக்க நாட்டில் ஆலவாய்ப்புழை என்னும் ஆற்றங்கரையில் உள்ளதுதான் காலடி என்ற சிற்றூர்.

இவ்வூரில் வித்தியாதிராஜர் என்ற அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். இவர் வடமொழியில் தேர்ச்சி பெற்ற வித்தகராக இருந்தார்.

இவருடைய மகனான சிவகுருவும் தந்தையைப் போலவே வடமொழியில் வளமை பெற்று இருந்தார். இவருடைய மனைவியாக ஆர்யாம்பிகை இருந்தாள்.

இருவரும் மணம் முடித்து ஆண்டுகள் பலவாகியும், குழந்தைப் பேறு இன்றி கவலைப்பட்டுக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள்.

மாளிகைபோல் வீடு இருந்தும், மலைபோல் செல்வம் இருந்தும், மனையில் துள்ளி விளையாட மழலை இன்றி இருந்து பயன் என்ன?

இனி நம்மால் ஒன்றும் இல்லை... எல்லாம் ஈசன் செயல் என்று எண்ணி விருஷாசலீஸ்வரர் கோயிலே கதி என்று அங்கேயே தங்கினர்.

நாளும் பொழுதும் சிவபெருமானுக்கு நெய் அபிஷேகமும், ஆராதனையும் நடத்திக்கொண்டு இருந்தார்கள். நாளெல்லாம் அவன் நாமத்தை நாவாரப் புகழ்ந்துகொண்டு இருந்தார்கள். பொழுதெல்லாம் அவனை நினைத்துக்கொண்டு இருந்தார்கள்.

வழக்கம்போல் நித்திய பூஜைகளை முடித்து, அவன் நாமத்தை நினைத்தபடியே தம்பதியர் நித்திரை கொள்ள சென்றார்கள்... தூங்கிக்கொண்டிருந்த சிவகுரு திடுக்கிட்டு விழித்தார். தான் கண்டது கனவா...? இவரைப் போலவே ஆர்யாம்பிகையும் தூக்கம் விழித்து அமர்ந்து இருந்தாள்.

''ஆர்யா, தூங்கவில்லையா...?'' எனக் கேட்டார்.

''தூங்கி எழுந்தேன்... நீங்கள்...?'' கேட்டாள்.

''நானும் அப்படியே... ஒரு நல்ல செய்தி சொல்லட்டுமா...?''

''சொல்லுங்கள். நானும் ஒரு நல்ல செய்தியைச் சொல்கிறேன்...''

''என் கனவில் ஈசன் வந்தார். வரம் தந்தார்...'' - என்றார்.

வியப்போடு, ''என் கனவிலும் வந்தார்...'' என்றாள்.

''ஆர்யா... என் கனவில் வந்த பகவான் உனக்கு நீண்ட காலம் வாழும் பல குழந்தைகள் வேண்டுமா...? இல்லை குறைந்த காலமே வாழும் அறிவுள்ள ஒரே குழந்தை வேண்டுமா? என்று கேட்டார். அதுதான் எனக்கு குழப்பமாக இருக்கிறது'' என்றார்.

''இதில் குழப்பம் என்ன இருக்கிறது?''

''ஆமாம்! ஏன் வீண் குழப்பம். குழந்தைப் பொறுப்பை ஈசனிடமே விட்டுவிடுவோம்'' - என்றார்.

''ஈசன் தீர்ப்பே நல்ல தீர்ப்பாக இருக்கும். அப்படியே செய்யலாம்...'' - என்றாள்.

தங்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறப் போகிறது, கவலை காணாமல் போகப் போகிறது என்ற மனநிறைவோடு இருவரும் மீண்டும் துயிலச் சென்றார்கள்.

அப்போது அங்கே ஜோதி வடிவில் இறைவன் தோன்றி, ''என்ன வரம் கேட்பதென்று முடிவுசெய்து விட்டீர்களா...?'' என்று கேட்டார்.

திடுக்கிட்டு கண் விழித்த அவர்கள் எழுந்து வணங்கி நின்று, ''முடிவு செய்து விட்டோம் பகவானே...!'' என்றனர்.

'பல குழந்தைகள் வேண்டிதானே...?''

''இல்லை பகவானே...!''

''குறைந்த ஆயுள் கொண்ட குழந்தையை வேண்டியா முடிவு செய்துள்ளீர்கள்...?''

''இல்லை பகவானே...!''

‘‘அப்படி இல்லையா...? வேறு எப்படி...?’’ ஈசன் கேட்டார்.

‘‘இறைவா, தங்கள் இதயம் போல் நடக்கட்டும்.’’ ஒருசேர இருவருமே சொல்லி வணங்கி நின்றார்கள்.

‘‘உங்களுக்குக் குறைவான ஆயுள் உள்ள அறிவான ஆண்மகன் பிறப்பான். அவன் இவ்வுலகில் ஆன்மிக வழி காட்டியாய் இருப்பான்’’ என்று சொல்லி மறைந்தார் இறைவன்.

கண்களில் ஆனந்த வெள்ளம் பெருக, இருவரும் கை தொழுது வணங்கி நின்றார்கள்.

விருஷாசலீஸ்வரை நோக்கி வந்து எதற்காக விரதம் இருந்தார்களோ அதற்கு அவன் அருள் கிட்டிவிட்டது.

புலர் காலையில் எழுந்து, குளித்து மூழ்கி மனம், வாக்கால் மெய்யுருக இறைவனை வழிபட்டு, தங்கள் ஊரான காலடியை நோக்கி, காலடி வைத்து மகிழ்வோடு நடக்கத் தொடங்கினார்கள், சிவகுருவும், ஆர்யாம்பிகையும்.

❒❒❒



## 2. அருள் மலர்ந்தது!

**கா**லடி வந்து சேர்ந்த தம்பதியினர், ஊரையே கூட்டி சந்நியாசிகள் முதல் சம்சாரிகள் வரை விருந்து படைத்து மகிழ்ந்தார்கள். அன்றே ஆர்யாம்பிகை கருவுற்றாள். காலக்கடலில் பல அலைகள் எழுந்து மறைந்தன.

பிள்ளை இல்லாக் குறை நீங்க பேறு பெறும் காலம் வந்தும், அவர்கள் உள் மனதில் ஒரு சின்ன கவலை வந்து புள்ளியாக நின்றது. குறை இல்லா மகன்தானே... குறைநாள் மகன்தானே என்பதுவே அக்கவலை. இருந்தும் அவர்களுக்கு இனம் புரியா மகிழ்ச்சி வெள்ளம் பொங்கிப் பொங்கி வழிந்தனவே!

நந்தன ஆண்டு வைசாக சுத்த சுக்ல பஞ்சமியில் ஆருத்ரா நட்சத்திரத்தில் வட்டச் சூரியன் நடுவானில் நிற்கும் நண்பகல் வேளையில், அழகே உருவான, அறிவே திருவான, அருளே வடிவான ஆண் குழந்தை ஒன்றினை ஆர்யாம்பிகை பெற்றெடுத்தாள்!

காலடி சிற்றூரில் கடவுளே கண் மலர்ந்தார்! அருள் மழையாய் ஆண்டவனே அவதரித்தார். பிள்ளை வரம் வேண்டி பிதற்றித் திரிந்தவள், தான் பெற்ற பிள்ளை முகம் கண்டு பெருமிதத்தால் உள்ளம் களி கொண்டாள்.

தந்தையான சிவகுருவோ, ஈசனடி மலர் சொரிந்தார். இதயத்தில் மகிழ்வு கொண்டார். இவர்களின் பிள்ளைப் பிறப்பை ஊரே புகழ்ந்தது; உறவோ மகிழ்ந்தது; விண்ணும் மண்ணும் ஒளிர்ந்தது.

ஆர்யாம்பிகை பெற்றெடுத்த அழகு மலருக்கு பதினோராவது நாள் பெயர் சூட்டும் பெருவிழா... அவர்கள் வீட்டில் ஊரே மகிழ்வோடு நிறைந்திருந்தன. குழந்தையின் முகத்தைக் கண்டவர் கண்கள் விரிந்தன. அதன் புன்னகை கண்டு மனம் மகிழ்ந்தனர். பெற்றவர் அவைகளைக் கண்டு பெருமைப்பட்டனர்.

அந்தக் குளிர் நிலவிற்கு, அழகு மலருக்கு, அசையும் மயிலுக்கு என்ன பெயர் வைக்கலாம்? எப்படி அழைக்கலாம்?

ஆளுக்கொரு பெயர் சொன்னார்கள். அந்தப் பெயருக்கும் பல பொருள் சொன்னார்கள். மூத்தோர் வந்தார்கள்... நாளும், கோளும் பார்த்தார்கள். நலமாய் பெயரும் வைத்தார்கள். ஆம்! சங்கரன் என்று அழைத்தார்கள்.

வயிற்றில் சுமந்த வளர்பிறையை தாய் ஆர்யாம்பிகை இப்போது மடி மீதும், மார் மீதும் சுகமாய் சுமந்தாள். அகமே மலர்ந்தாள். தாய் அணைக்காத வேளையிலே, தந்தை அள்ளி எடுப்பார்; அன்பில் திளைப்பார்; தோளில் சுமப்பார்; பாச நதியில் மிதப்பார்.

நதிக்கரை ஓர பயிர்போல நாளும் வளர்ந்தான் சங்கரனும். பிள்ளை வளர்ச்சி பெற்றோர்க்கு மகிழ்ச்சிதானே! அவர்களும் மகிழ்ந்தார்கள்.

அதே சமயம் மருண்டார்கள்; மனம் நொந்தார்கள். ஏன்...?

'குறையில்லாப் பிள்ளை, நம்மை விட்டு குறைநாளில் பிரிவானே!' இறைவன் சொன்ன வார்த்தைகள் அவர்களது மகிழ்ச்சிக்கு தடை போட்டுக் கொண்டிருந்தன.

சங்கரனின் தந்தை ஒவ்வொரு நாளும் இறைவனுக்கு நிவேதனம் செய்தபின்தான் அவர் உணவு உண்பார்.

ஒருநாள் அவர் வெளியூர் செல்ல, அப்பணியை சங்கரன் தன் தந்தையைப் போல இறைவன் முன்னே பாலையும், பழத்தையும் வைத்து நிவேதனம் செய்து, தந்தையைப் போல் இமைகளை மூடி இறைவனை வணங்கி, விழி திறந்தபோது எதிரே வைத்த பாலும் பழமும் இல்லாது இருப்பதைப் பார்த்தான்.

மகனின் இறையாற்றலைக் கண்டு மாதா மனம் மகிழ்ந்தாள். அதேவேளை, மகன் சங்கரன் இறைவனை வணங்கி, பாடவும் தொடங்க, தாய் ஆர்யா வியப்பில் வீழ்ந்தாள்!

❒❒❒

# 3. மகிமை மலர்ந்தது!

ஒருமுறை உள்ளூர் கோயிலில் தேரோட்டம் நடந்தது. அதைக் காண தன் அன்பு மகனை தோளில் சுமந்து சென்றபோது, தோள் மீது இருந்த மகன் காணாது போனான். கலங்கிப் போனார் தந்தை. செய்வது அறியாது அங்கும் இங்கும் ஓடினார்; தேடினார்; எங்கும் காணாது வாடினார்.

பின் மகன் தேர் மீது இருப்பதைப் பார்த்து அதிசயித்து நின்றார். சின்ன குருத்திலேயே குழந்தையின் அற்புதங்களை இப்படிக் கண்டு பெருமிதம் கொண்டிருந்தார், தந்தை.

மூன்று வயதில் சங்கரன் முத்தாய்ப் பேசினான்; முறையாய் பேசினான்; இறையாய் பேசினான்; பிறர் மெச்சப் பேசினான். எண்ணிப் படித்தான்; எழுத்தைக் கூட்டிப் படித்தான்; ஐந்து வயதில் வடமொழியில் பாடம் படித்தான்; பாட்டும் படித்தான். இந்த வயதிலேயே அவனுக்கு உபநயனமும் செய்யப்பட்டது.

இந்த நிலையைக் காணுகின்ற வாய்ப்பினை அவன் தந்தைக்கு இல்லாது போயிற்று. அந்தோ...! அவர் இறை உலகம் சேர்ந்திருந்தார். தந்தை இல்லாப் பிள்ளையை, தாயாகவும், தந்தையாகவும் இருந்து சங்கரனை வளர்த்து வந்தாள், ஆர்யாம்பிகை.



# 4. கருணை கசிந்தது!

சங்கரனுக்கு குருகுல வாசம் தொடங்கியது. அன்றைய கல்விமுறை அதுதானே. சங்கரனும் குருகுலம் சென்றடைந்தான். தாயும் அனுப்பி வைத்தாள். அவன் வேதங்களைப் படித்தான். பண்புறு கலைகளைப் படித்தான். ஏழு வயதிற்குள் வேதம் முதல் காவியங்கள் வரை பழுதறக் கற்று முடித்தான்.

வீட்டைவிட்டு குருகுலம் வந்தவர்கள், வீடுதோறும் சென்று பிட்சை எடுத்து உண்பது என்பது அக்கால முறையாகும். அதன்படியே சங்கரனும் செய்து வந்தான்.

ஒருநாள் அயாசகன் என்ற ஏழை அந்தணன் வீட்டு வாசலின் முன்னே வந்து நின்றான், சங்கரன். அன்று துவாதசி நாள். முதல் நாள் முழுதும் ஏகாதசி விரதம் இருப்பவர்கள், மறுநாள் காலை உணவு சமைத்து உண்பது வழக்கம்.

இந்த நிலையில் அந்த ஏழை அந்தணன் வீட்டின் முன்னே பிட்சைப் பாத்திரத்தோடு, சங்கரன் நின்று பிட்சை கேட்கிறான். நேரங்கள் கடந்தும் வீட்டினுள்ளிருந்து யாரும் வெளிப்படாத காரணத்தால், மீண்டும் மீண்டும் பிட்சைக் கேட்டு குரல் கொடுக்கிறான்.

அழகான குழந்தை ஒன்று தன் வீட்டின் முன்னே பிட்சை கேட்டு நிற்பதை அந்த ஏழை அந்தணனின் மனைவி பார்க்கிறாள். ஏகாதசி விரதம் முடிக்க, உணவு சமைக்க பொருளற்ற நிலையில் இரண்டு நெல்லிக் கனிகளைச் சாப்பிட்டு விரதம் முடிக்க இருக்கும் அந்த ஏழை அந்தணனின் மனைவி, சங்கரனைப் பார்த்து, யாசகம் கேட்டும் இவனுக்குக் கொடுக்க எதுவுமில்லையே என்று வேதனைப்பட்டு நிற்கிறாள்.

தன்னையே பார்த்துக் கொண்டு நிற்கும் அந்த அன்னையைப் பார்த்த சங்கரன், ‘நமக்குப் பிட்சை இடாமல் இப்படி நிற்கிறாரே...! நாம் நிற்பதா...? நடப்பதா...?’

'சரி... இன்னொரு முறை பிட்சை கேட்டு விடுவோம்' என்று பிட்சை கேட்டான்.

மூன்றாவது முறையும் யாசகம் கேட்டு நிற்கும் இவனை நாம் சும்மா அனுப்பக் கூடாது... ஏதாவது செய்தே ஆக வேண்டும். தான் வறுமையில் இருந்து விரதம் முடிக்க வைத்திருந்த இரண்டு நெல்லிக்கனிகளில் ஒன்றை எடுத்து வந்து சங்கரனின் பிட்சைப் பாத்திரத்தில் இட்டாள்.

சங்கரன் அந்த தாயின் முகத்தை உற்றுப் பார்த்தான். தன் பாத்திரத்தில் கிடந்த நெல்லிக்கனியைப் பார்த்தான். அதில் அத்தாயின் ஈர இதயம் தெரிந்தது. இந்த இதயத்திற்கா இந்த ஏழ்மை...? கூடாது. இவர்கள் வாழ்வு வளம்பெற வேண்டும்.

திருமகளை எண்ணி இதயம் கசிந்து ஒரு பாடலைப் பாடினான். அத்தாய் வீட்டினுள் செல்ல, அங்கே கூரையில் இருந்து தங்க நெல்லிக்கனிகள் வீடு முழுவதும் மழைபோல் பெய்து கொண்டிருந்தன.

ஏழை அந்தணனின் குடும்பம் சங்கரனின் திருப்பாட்டால் அருள் பெற்றது. அதைக் கண்டு அங்கு வந்த அந்தணனும், அவன் மனைவியும் சங்கரனை வாழ்த்தி தொழுது நின்றனர்.

அன்றோடு அவர்கள் வறுமைப் பிடியிலிருந்து விடுபட்டு, வாழ்வாங்கு வாழ்ந்தார்கள். இப்படி சங்கரனின் முதல் பாடலே கருணைப் பாடலாக - அருள் பாடலாக கசிந்தது.

பிட்சைப் பாத்திரத்தோடு குருகுலத்திற்கு திரும்பிக் கொண்டிருந்தான் சங்கரன். குருகுலத்தில் சங்கரனை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தது ஓர் உயிர்!

□

பசியோடு பாத்திரம் ஏந்தி வீடு வீடாக பிட்சை எடுத்துக் கொண்டு குருகுலத்தை நோக்கி வந்துகொண்டிருந்த மகனைப் பார்த்த ஆர்யாம்பிகை, ''மகனே! என்ன கோலமடா இது...?'' என்று கேட்டுக்கொண்டே ஓடிச்சென்று கட்டியணைத்து கதறி அழுதாள்.

அமைதியாக சங்கரன், ''அம்மா! ஏன் அழுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

''என் கண்ணே! உன்னை இந்த நிலையில் பார்த்து நான் அழாமல் ஆனந்தமா கொள்ள முடியும்...? பாலோடும், தேனோடும் உண்பதற்கு நீ இருக்க, இந்த வெய்யிலிலே வீதி வீதியாக, வீடு வீடாகச் சென்று யாசகம் கேட்டு பிழைக்க வேண்டுமா, மகனே?'' அழுத கண்ணீரோடு தாய் ஆர்யாம்பிகை கேட்டாள்.

''உழைத்து உண்பதுதானே உத்தமர் பணி. குருகுலவாசத்தில் இதுதானே அம்மா முறை. கஷ்டப்படாமல் கல்வி வராதே தாயே...!'' மிகவும் அமைதியாகச் சொன்னான், சங்கரன்.

''என்னைக் கொல்லாமல் கொல்லாதேடா மகனே! உனக்கு கல்வியும் வேண்டாம். உன் கஷ்டம் கண்டு நான் கலங்கவும் வேண்டாம். உன் ஒருவனுக்கு இருக்கும் செல்வமே அதிகமடா. உனக்குப் பிறகும் அச்செல்வம் நிலைக்குமே!'' - தாய் மனம் பேசியது.

''அம்மா! பொருள் செல்வம் நில்லுமா? அறிவுச் செல்வம் தானே ஆயுளுக்கும் வரும். அது சரி தாயே! தாங்கள் இங்கே எதற்காக வந்தீர்கள் என்பதைச் சொல்லவில்லையே...?'' - கேட்டான் மகன்.

''எதற்காக வந்தேன்? ஏன் இந்தக் கோலத்தில் உனைக் கண்டேன்? எதைச் சொல்வேன்? எதைத் தள்ளுவேன்? என் மனம் கலங்குதடா சங்கரா?'' என்று கூறி மீண்டும் அழுதாள், தாய்.

''நீங்கள் எதைச் சொல்வதானாலும் சரி, வந்து கேட்கிறேன். என் குருவின் மனைவியிடம் இந்தப் பிட்சையை அளித்து பிரசாதம் பெற்று வந்துவிடுகிறேன்...'' என்று சொல்லி ஓடினான் சங்கரன்.

குருகுலத்தில் இருந்து மகனை அழைத்துப் போகும் முடிவோடு ஆர்யாம்பிகை அங்கே நின்று கொண்டிருந்தாள்.

குருகுலத்தில் இருந்து திரும்பி வந்தான் மகன். ''இப்போது சொல்லுங்கள் அம்மா!''

''வா, நம் வீட்டுக்குப் போகலாம்...''

''என்னம்மா இது...? இதற்காகவா வந்தீர்கள்?'' - கேட்டான் மகன்.

''ஆமாம்! உன்னை அழைத்துப் போகவே வந்தேன். உன் தந்தையைப் பிரிந்த நான், உன்னையும் இனி பிரிந்து என்னால் வாழ

முடியாது. வா, போகலாம்...!'' மகனின் கரம் பற்றினாள், ஆர்யாம்பிகை.

''அம்மா! குருகுல வாசம் இன்னும் முடியவில்லையே...! நான் அறிய வேண்டிய கல்வி அதிகம் இருக்கிறதே!''

''கண்ணே! உன் இந்த எட்டு வயதிற்குள் வேதங்கள், வேதாந்தங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், காவியங்கள் எல்லாவற்றையும் நீ கற்றுவிட்டாய் என்பதை நான் அறிவேன். நீ புறப்படு!''

தாயின் கண்ணீர் முன்னே கல்வி கலங்கியது. குருகுலத்தை சங்கரன் ஏக்கமாய்ப் பார்த்தான்.

''மகனே! குருவிடம் ஆசி பெற்று வா...!''

கட்டளை போல் பேசினாள் தாய். தாய் சொல்லைத் தட்டாமல் ஏற்றான். குருகுலம் சென்று குருவையும், குரு பத்தினியையும் வணங்கினான். தன்னோடு அங்கே கல்வி பயின்ற தோழர்களை, விழியில் நீர் பெருகப் பார்த்தான். பிரிந்து நடந்து வந்து, அன்னையிடம் சேர்ந்தான்.

மகனுக்காகக் காத்துக்கொண்டு இருந்த தாய், அவன் கை பிடித்து மகிழ்ச்சியோடு குருகுலத்திலிருந்து வெளி நடந்தாள். மகன், சங்கரன் பின் தொடர்ந்தான்!

❒❒❒



## 5. உறவு – துறவு!

பிறந்த மண்ணில் ‘காலடி’ வைத்த சங்கரன் வாழ்க்கை அமைதியாய் ஓடும் ஆற்றைப் போல் நடந்து கொண்டிருந்தது.

வழக்கமாய் ஆர்யாம்பிகை ஆற்றுக்குச் சென்றுதான் குளித்து வருவாள்.

அப்படி ஒருநாள் செல்லும் வேளையில் மயங்கி விழுந்தாள், ஆர்யாம்பிகை.

அன்றிலிருந்து அவளால் ஆற்றுக்குக் குளிக்கப் போக முடியவில்லை. ஏங்கினாள்...

மகனோடு ஆற்றுக்குக் குளிக்கச் செல்லும் வேளையில் எல்லாம், தன் மகன் சரங்கரனிடம் அவன் திருமணம் குறித்துப் பேசுவாள்.

சந்நியாசி நிலையில் வாழும் சங்கரன், தாயின் உள்ளம் புண்படக்கூடாதே என்பதால் எதையுமே சொல்லாமல் அமைதி காப்பான். மெல்லச் சிரிப்பான்.

ஒருபொழுது, அகத்தியர் சித்தர் போலவும், நாரதர் அந்தணர் போலவும் வடிவம் கொண்டு சங்கரனிடம் வந்து, “நீ ஆன்மிக தொண்டு செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது...” என்று நினைவுபடுத்தினர்.

சங்கரனின் அருகினில் நின்றிருந்த அன்னையின் காதுகளில் ‘காலம் வந்துவிட்டது...’ என்ற வார்த்தைகள் மட்டும் சென்று சேர்ந்தது.

அதைக்கேட்ட தாயின் உள்ளம் தன் மகனின் குறை ஆயுளைப் பற்றி நினைத்தது.

ஈசன் தங்களுக்குப் பிள்ளை வரம் அளித்தபோது, ‘குறை நாள் ஆயுள் உள்ள பிள்ளை’ என்று கூறியது நெஞ்சில் நிழலாட, கவலை குளத்தில் மூழ்கிப் போனாள்.

"ஈசனே, எம்பெருமானே! மணக்கோலத்தில் என் மகனை நான் கண்டு களிக்க முடியாதா? எங்கள் சொத்தை எல்லாம் அவன் ஆள முடியாதா...? இல்லற வாழ்க்கையில் வாழ இயலாதா...?" வாடிச் சோர்ந்தாள் ஆர்யாம்பிகை.

சங்கரனின் தாய் மனம் கண்ட அகத்தியர், ஆர்யாம்பிகையிடம், "தாயே! தாங்கள் தவமாய் பெற்ற பிள்ளை இல்லற வாழ்விற்கு ஏற்புடையவன் அல்ல. துறவற வாழ்வே அவனைத் தொடரும்..." என்று சொல்லி மறைந்தார்.

பெற்ற தாயுள்ளம் அதை ஏற்குமா...? கேட்குமா? அகத்தியர் சொல்லைக் கேட்டதை உள்ளத்தில் போட்டு மறைத்தாள்.

'எறும்பு ஊற கல்லும் கரையும் என்பார்களே...! என் பிள்ளையின் மனதும் ஒருநாள் கரையாதா? கல்யாணம் நடக்காதா...?' என்று எண்ணி தன் ஆசைகளை உள்ளத்திலேயே வளர்த்துக் கொண்டாள்.

ஆற்றுக்குக் குளிக்கப் போகும்போது மயங்கி விழுந்த தாயின் உடல் சற்று நலப்பட்டது.

இந்த நிலையில் வழக்கம்போல் "ஆற்றுக்குக் குளிக்கப் போக வேண்டும், வா மகனே!" என்று சங்கரனை தாய் அழைத்தாள்.

தாயிடம் மகன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அவள் பிடிவாதம் பின்வாங்குவதாக இல்லை.

அவன் அம்மாவின் அன்பின் முன்னே தோற்றுப்போனான். ஆண்டவன் முன்னே அவன் புகழ் போற்றி நின்றான்; வெற்றி பெற்றான்...

என்ன வியப்பு...? தன் தாய் நீண்ட நாள் தூரத்தில் சென்று நீராடிய ஆறு, அப்போது ஊருக்குள்ளேயே - அவன் வீட்டிற்கு அருகிலேயே ஓடிவரத் தொடங்கியது.

அதைக் கண்ட மகிழ்ச்சியில், "மகனே, சங்கரா! ஆறுதான் நம் ஆத்துப் பக்கம் வந்துவிட்டதே. இப்போதாவது என்னை அழைத்துப் போயேன், குளிக்க" என்றாள் மகிழ்ச்சியோடு, தாய்.

இந்த வார்த்தைகளுக்காகத்தானே அவன் காத்திருந்தான்!

அவன் எதையும் அறியாதவன்போல், "தங்கள் எண்ணம் போலவே ஆகட்டும் அம்மா! வாருங்கள் போகலாம்" என்று அன்னை கரம் பற்றி அழைத்துப் போனான், சங்கரன்.

தாய் மகிழ்ந்து போனாள். அவன் பின்னே நடந்து போனாள்!

புது வெள்ளத்தில் தாயும், மகனும் மகிழ்வோடு குளித்தனர்.

குளித்து முடித்து கரை ஏறிய தாய், ஈரப் புடவையை காற்றில் உலர்த்திக் கொண்டிருந்த வேளையில்...

''அம்மா...'' என்று ஓங்கார குரல் கொடுத்தான், சங்கரன்.

பெற்ற வயிறு பாசத்தோடு துடிக்கத் திரும்பி, ''என்ன மகனே...?'' என்று கேட்டாள். மகனை நோக்கி, பின் அங்கே ஓடினாள்.

''அம்மா, என் காலை முதலைப் பிடித்துவிட்டதே!'' கதறினான் மகன்.

கரையில் நின்று துடித்தபடியே தாய் பார்த்தாள்.

மகனின் காலை முதலைப் பிடித்து இருந்ததைக் கண்டு துடித்தாள்.

'குளிக்க பிடிவாதமாக வந்திருக்க வேண்டாமே! இப்போது என் மகன் முதலையிடம் மாட்டிக் கொண்டானே!' என்று எண்ணி தாயுள்ளம் புலம்பித் தவித்தது; ஏதும் புரியாது நின்றது.

ஆர்யாம்பிகையின் கதறலைக் கேட்டு கிராம மக்களே அங்கே கூடிவிட்டனர்.

சங்கரனின் காலை முதலை கொஞ்சம் கொஞ்சமாக நீருக்குள் இழுத்துக் கொண்டிருந்தது.

தண்ணீரில் இறங்கி முதலையை எதிர்க்க முடியாத நிலையில் இருந்த தாய், ''நானும் என் மகனோடு போய்விடுகிறேன்'' என்று புலம்பி ஆற்றில் விழப்போன ஆர்யாம்பிகையை ஊர்மக்கள் கூடி நின்று தடுத்து நிறுத்தினார்கள்.

''உன் தந்தையை இழந்தேன்; என் நலன்களை இழந்தேன்; இப்போது உன்னையும் இழந்து நான் மட்டும் ஏன் உயிர் வாழ வேண்டும்?'' என்று கன்றைப் பிரிந்த தாய்ப்பசுவைப் போல கதறி நின்றாள் தாய்.

''அம்மா...! என்னைக் காப்பாறுங்களேன்...'' முதலை வாய்ப்பட்ட மகன் அழுதான்.

''என்னால் எப்படி மகனே முடியும்?''

''தாயே...! உங்களால் மட்டும்தான் என்னைக் காப்பாற்ற முடியும். மற்றவர்களால் அது முடியாது.''

''அப்படியா?''

''ஆமாம்! நான் சொல்வதைக் கேட்பீர்களா?'' கண்ணீருடன் கலங்கிக் கேட்டான் மகன்.

''சொல் மகனே! எதுவானாலும் என் உயிரான உனக்காகச் செய்கிறேன்...'' பதட்டத்தோடு கேட்டாள், தாய்.

''அம்மா! அதை என் வாயால் எப்படிச் சொல்வேன்!''

''எதுவாக இருந்தாலும் மனம் விட்டுச் சொல்லடா மகனே, செய்கிறேன்...''

''நீ மறுக்க மாட்டாயே, அம்மா...?''

''சத்தியமாக மறுக்க மாட்டேன், சொல்!''

''நீங்கள் என்னை மறந்துவிட வேண்டும்... அதாவது தியாகம் செய்ய வேண்டும்...''

அதைக்கேட்ட தாய் மயங்கினாள்; தயங்கினாள். ''என் கண்மணியே! நீ என்ன சொல்கிறாய்?'' நடுக்கத்தோடு கேட்டாள்.

சங்கரனின் காலைப் பிடித்து இருந்த முதலையின் மூர்க்கத்தனம் முன்னேறிக் கொண்டிருந்தது.

மகன் சொன்னான்: ''அம்மா! நான் சந்நியாசம் போவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும்.''

''என் செல்வமே! என் உயிரே! உன்னை நான் மணக் கோலத்தில் பார்க்க வேண்டும்; மகிழ்வோடு நீ வாழ வேண்டும்; நமக்குள்ள சொத்தையெல்லாம் நீ ஆள வேண்டும்; அதைப் பார்த்து பின் நான் மாள வேண்டும் என்றெல்லாம் எண்ணித்தான் நான் உன்னை குருகுலத்தில் இருந்து அழைத்து வந்தேன். உன்னைக் காவியணிந்து சந்நியாசி கோலத்தில் காணவா அழைத்து வந்தேன்? நீ இப்படிச் சொல்கிறாயே...! அதை நான் என் வாயால் எப்படிச் சொல்வேன்...'' – கண்ணீராய் கேட்டாள் தாய்.

''என்னைக் காப்பாற்ற நினைத்தால், தாயே, நீங்கள் சொல்லியே ஆக வேண்டும்!''

''ஆணி போன்ற பற்களையுடைய முதலையிடம் இருந்து 'சந்நியாசம்' உன்னை எப்படி மகனே காப்பாற்றும்?'' விம்மிய படியே தாய் கேட்டாள்.

''தாயே! நான் சொல்வதைக் கூர்ந்து கேளுங்கள்...!''

''சொல்லடா மகனே, சொல்...''

''அம்மா... நான் இந்த முதலையிடம் உயிர்விட வேண்டும் என்பது இப்பிறவியில் எனக்கு விதி. இந்தப் பிறவி நீங்கி, அடுத்த பிறவி நான் எடுத்தால்தான் எனக்கு இந்த விதியில் இருந்து விடுதலை கிடைக்கும் தாயே...! சந்நியாசம் என்பது புனர் ஜென்மம் மாதிரி. நான் சந்நியாசியானால் இந்தப் பிறவியின் விதியிலிருந்து தப்பலாம் அல்லவா?'' - அஞ்சியும் கெஞ்சியும் கேட்டான் மகன்.

தாய்மை, மகன் சொன்னதைக் கேட்டு, அலைபட்ட துரும்பாய், ஆலைபட்ட கரும்பாய் தத்தளித்தது; நொந்து போனது.

''அம்மா...! என் உயிர், முதலை வாயில் கொஞ்சம் கொஞ்சமாகப் போய்க் கொண்டிருக்கிறது. காலம் கடற்கரையில் ஏற்றி வைத்த கற்பூரத்தைப்போல் கரைந்து கொண்டிருக்கிறது.''

''என் செல்வமே! என் ஜீவனே! என்னை என்னதான் செய்யச் சொல்கிறாய்?''

கூடியிருந்த ஊர் மக்கள் தாயையும், சேயையும் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

''தாயே! நான் சொன்னதை சோதித்துப் பார்க்கலாமே! வெற்றி பெற்றால் நான் உயிரோடு தப்பலாமே! அப்போது என் உயிராவது மிஞ்சுமே அம்மா! இன்னும் நீங்கள் தாமதித்தால் என் உயிர் பிரிவது உறுதியாகிவிடுமே, அம்மா...!''

''ஈஸ்வரா...!''

''என் தாயே...! என் காலைப் பிடித்துள்ள முதலைக் காலனிடம் இருந்து நான் பிழைக்கவே முடியாதா...?''

''என்ன சோதனை இறைவா...?'' என்ற தாய், மகனின் துன்பங்கண்டு கண்களை மூடி அழுதாள்; ஆண்டவனைத் தொழுதாள்; மீண்டும் 'இறைவா...!' என்று கூறி துடித்தாள்; துவண்டாள்.

''அம்மா...! இறப்பு என்னை இழுக்கிறது...'' - மகன் கண்ணீருடன் முதலையிடம் போராடிக் கொண்டிருந்தான்.

மகனின் நிலை கண்டு தாயின் உள்ளம் வெடித்தது. ஒரு முடிவை எடுத்தது. ''மகனே...! நீ எப்படியாவது உயிரோடு இருந்தால் போதுமடா கண்ணே! போதும்...'' - மின்னலாய் தாயின் வார்த்தைகள் ஒளிவிட்டன.

பெற்ற தாயின் அந்த வசந்த வார்த்தைகளுக்காகத்தானே அந்த மக(ா)ன் காத்திருந்தான்; மனம் பூத்திருந்தான்.

தாயின் ஒப்புதல் இல்லாமல் மகன் ஒருவன் சந்நியாசம் கொள்ளக் கூடாதே. அதுதானே சாஸ்திரம்!

மகிழ்ந்தான் சங்கரன். துறவு மந்திரத்தை ஜெபித்தபடியே நீரில் மூழ்கி எழுந்தான்.

அதே நேரம் அவன் காலைப் பற்றியிருந்த முதலை மறைந்து, கந்தர்வனாக மாறி நின்றான்.

நின்றவன், ''சுவாமி! கடந்த என் காலத்தில் கள் அருந்துவதும், கன்னியரைக் கூடுவதும் மட்டுமே தலையாய இன்பமென தான்தோன்றித் தனமாக அலைந்து வந்தேன்.

ஒருநாள் என்னிடம் வந்த துர்வாச முனிவரை மது, மாது மயக்கத்திலிருந்த நான் அவரை துச்சமென நினைத்துப் பேசி விட்டேன்.

அதனால் கோபத்தில் என்னை முதலையாகும்படி சாபமிட்டார்.

நான் என் தவறை உணர்ந்து அவரிடம் மன்றாடி மன்னிப்பு வேண்டினேன்.

அவர் அப்போது, 'சிவபெருமான் அருள் பெற்று சங்கரன் என்பவர் தோன்றுவார். அவர் இந்நதிக்கு வரும்போது அவர் காலைப் பற்றுவாய். அச்சமயம் உனக்கு சாப விமோசனம் கிட்டும்' என்று கூறி மறைந்தார்.

அதன்படியே இவ்வளவு காலம் இந்நீரிலே முதலையாக உலவி வந்த எனக்கு, சாபவிமோசனம் அருளினீர்கள். தங்களுக்கும் நான் ஓர் உதவி புரிந்த பாக்கியத்தையும் பெற்றேன்; உற்றேன் மகிழ்ச்சி...!'' என்று சங்கரனை வாழ்த்திவிட்டு விண்ணில் மறைந்தான், கந்தர்வன்.

விண் நோக்கி இருந்த விழிகளை மண் நோக்க பார்வையைப் பதித்தார் **சங்கரர்!**

❑

ஈர இதயமும், ஈர உடையுமாய் ஆற்றில் நின்றிருந்த சங்கரர், கரையேறி வந்தார்.

இதுவரை ஆற்றில் நடந்தவைகள் கனவா, நனவா என்ற நிலையில் ஏதும் புரியாது நின்றிருந்தார், ஆர்யாம்பிகை.

கரை வந்து சேர்ந்த சங்கரரை, தாய் விழியாலே தழுவினார். அவரும் அப்படியே!

அங்கே சில நொடிப்பொழுது மௌனக் கவிதை அரங்கேற்றம் நடந்தது.

தாயை வலம் வந்து வணங்கினார். பின் உலக நலன் வேண்டி அங்கிருந்து நடக்கத் தொடங்கினார்.

அங்கே மௌனம் கலைந்து ஒற்றைச் சொல்லில் ஒரு புதுக்கவிதை பூத்தது. அது இப்படி...

''மகனே...!''

கவிதைக்குரிய நாயகர் சங்கரர் தாயைத் திரும்பிப் பார்த்தார்.

''நம் வீட்டுக்குப் போகலாம் வா...'' - தாய், சங்கரரை நெருங்கி நின்று அழைத்தாள்.

''அம்மா, தாங்கள் சத்தியத்தை மீறலாமா...?''

''நான் சத்தியத்தை மீறுகிறேனா...?''

''ஆம் தாயே! ஆற்றில் நான் முதலை வாய்ப்பட்டபோது துறவு கொள்ள சத்தியம் செய்துவிட்டு, இப்போது வீட்டிற்கு அழைக்கலாமா...?''

''என்ன மகனே சொல்கிறாய்...?''

''என்னைப் போன்ற துறவிகளுக்கு உலகம் வீடம்மா; உற்றார் உறவினர் எல்லோருமே உலகோர்தானே...! அதைத்தான் சொல்கிறேன்.''

''மகனே! நீ அறியாமல் பேசுகிறாய்! உனக்கு கல்யாணம் நடந்தால் எல்லாம் சரியாகிவிடும். வாப்பா, போகலாம்...!'' தன் நீண்ட நாள் ஆசையைக் கூறி நின்றாள், தாய்.

''நான் உங்களுக்குப் பிறந்தேன் என்பது எப்படி உண்மையோ, அப்படியே இந்த உலக நலனுக்காகப் பிறந்தவன் என்பதை உணருங்கள், தாயே...!''

''மகனே! நீ துறவு கொண்டு பெற்ற தாயாகிய என் உறவைத் துறக்கலாமா? தாயை மறக்கலாமா...?''

''அம்மா...! உலகிலுள்ள பெண்கள் எல்லோருமே எனக்குத் தாய்தான். என்னை விட்டால் உங்களுக்கு வேறு உறவு இல்லை என்பதும் நான் அறிவேன். என்னை நீங்கள் துறப்பதில்தான் தங்களுக்கு பெருமையே வந்து சேரும். நான் இந்த உலகில் செய்ய

வேண்டிய பணிகள் அதிகமாக உள்ளன. ஆகவே, என் நிலையில் என்னை தயவு செய்து விட்டுவிடுங்கள். நான் செல்கிறேன்!''

''மகனே! இந்த வயதான காலத்தில் நீ தூரப் பயணம் சென்றால் எனக்கு யார் துணையிருப்பர்? என் இறுதி காலத்தில் நான் உன்னை எங்கு கண்டு தேடுவேன்...?'' தாய் அழுதாள்.

''அம்மா! தாங்கள் இறுதி வேளையில் என்னை நினையுங்கள். அடுத்த நொடியே தங்கள் அருகில் உங்கள் மகனாகிய நான் இருப்பேன். என் மடி மீது தாங்கள் இருப்பீர்கள்.''

ஆர்யாம்பிகைக்கும், சங்கரருக்கும் நடந்த வாக்குவாதங்களை கண்ணீர் பெருக ஊர்மக்கள் பார்த்துக்கொண்டு நின்று இருந்தார்கள்.

''தாயே! நான் கருவில் உருவாகும் முன்னும், அதன் பின்னும் நீர் சுமந்த துன்பங்கள் கொஞ்சமா? குறை ஆயுள் கொண்ட பிள்ளைதானே நம் பிள்ளை என்று தாங்களும், தந்தையும் தனிமையில் வாடிய நாட்கள் கொஞ்சமா? என் அகால மரணத்தை ஒவ்வொரு நாளும் நினைத்து நினைத்துத்தானே அவர்கள் வாழ்க்கையே முடிந்து போனது? உங்களின் எல்லாத் துன்பத்திற்கும் நான்தான் காரணம் தாயே...?''

தாய் ஏதும் சொல்ல முடியாத நிலையில் கண்களில் நீர் வழிய, உடலில் நீர் வடிய நின்று கொண்டிருந்த தன் மகன் சங்கரரைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

கரம் குவித்து தாயை வணங்கினார், சங்கரர். அவரின் எதிர் திசையை நோக்கி ஈரத் துணியோடு நடந்தார். அவர் நடந்து சென்றது இருளிடை ஒரு பேரொளி நடந்து போவது போல் இருந்தது.

அவர் நடந்து செல்வதைப் பார்த்த தாயின் உள்ளம் வெடித்துச் சிதறியது.

சங்கரர், பிறந்த மண்ணைத் துறந்தார்; பெற்ற தாயை மறந்தார்; நடந்தார்; நடந்தார்; நடந்து கொண்டே இருந்தார்.

அவர் காலடிகள் நர்மதையில் போய் நின்றன.

❑❑❑

# 6. கட்டளை கனிந்தது!

அங்கே...

மலைக்குகையில் அறிவின் சுடரொளியாய் கோவிந்த பகவத் பாதர் தவமேற் கொண்டிருப்பதைக் கண்டார்.

சங்கரரின் கால் பட்ட மகிழ்ச்சியில் நர்மதை பொங்கிச் சிரித்தாள். அந்தச் சிரிப்பு கரையை நோக்கி வெள்ளமாய் விரிந்தது.

அதே நேரம் கோவிந்த பாதர் கண்களைத் திறந்தார்; சங்கரரைக் கண்டார். அவர் பின்னே பொங்கி வரும் நர்மதையையும் கண்டார்.

நர்மதை பொங்கி சீறிவரும் நிலையை உணர்ந்த சங்கரர், கமண்டலத்தை நீரில் கவிழ்த்தார். என்ன வியப்பு! கமண்டலத்தில் அடங்கினாள், நர்மதை.

சங்கரரின் வரவை எண்ணித்தானே கோவிந்த பகவத் பாதர் தவமேற்கொண்டு அங்கே இருந்தது!

சங்கரரின் அற்புத நிகழ்ச்சியைக் கண்ட பகவத் முனிவரின் உள்ளம் மகிழ்ந்தது. சங்கரரிடம் ஒரு கேள்வியை நட்டார்: "நீ யார் மகனே...?"

"அறிவும் ஆனந்தமும் கொண்ட சிவம் நான். சிவமே நான்...!"

ஆற்றல் மிக்க அறிஞர் பெருமக்களே உடன் கூற இயலாத கேள்விக்கு, சங்கரர் மிக எளிதாக கூறிய பதிலைக் கேட்ட முனிவர் மெய்சிலிர்த்துப் போனார்.

சங்கரரின் குரு கோவிந்த பகவத் பாதர். இவரது குரு கௌட பாதர். அவர் பதஞ்சலி முனிவரிடத்துப் பாடம் கேட்டவர்.

இந்த நிலையில் சங்கரரின் அற்புதமான அறிவைக் கண்டு, முன்பே உள்ளத்தால் துறவியாகிய நிலையிலிருந்த சங்கரருக்கு பகவத் பாதர் காவியாடையை வழங்கினார்.

நெற்றியிலும் நீறு, மேனியிலும் நீறு என்ற நிலையிலே உலக நன்மைக்காக தன்னை முன்நிறுத்தி துறவறத்தைக் கைக்கொண்டார்.

ஆணவத்தை அழித்துப் போட்டார்; அழகிய முடியை மழித்துப் போட்டார்; மனதை அடக்கிப் போட்டார்; த்ரிதண்டத்தை கையில் பிடித்துக் கொண்டார்.

குருவை வணங்கி நின்றார். பொழுதும் குருவிற்கு தொண்டு செய்தார். அவர் ஆசியைப் பெற்றார்.

தனக்கு சங்கரர் உதவி செய்வதைவிட, இந்த உலகிற்கு ஆற்ற வேண்டிய கடமை அதிகம் இருக்கிறது என்பதை உணர்ந்த கோவிந்த பகவத் பாதர், ஒருநாள் சங்கரரை அருகில் அழைத்தார்.

பயபக்தியோடு குருவின் அழைப்பை ஏற்று சங்கரர், அவர் முன்னே பணிந்து நின்றார்.

விளைந்த நெற்கதிராய் தலை வணங்கி நின்ற சங்கரரின் பண்பையும், பக்தியையும், அன்பையும் கண்டு, ஒரு நொடி மலைத்து நின்ற குரு, மனதை திடப்படுத்திக்கொண்டு, ''சங்கரா...! நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்...''

''சொல்லுங்கள், காத்திருக்கிறேன்...''

''என்னை விட்டு நீ பிரிந்தாக வேண்டும்.''

'குருநாதருக்கு தவறியும் நாம் பிழை செய்யவில்லையே...! ஏன் இந்த தண்டனையை குரு தருகிறார்...?' சங்கரரின் உள்ளம் சங்கடப்பட்டபடியே, ''நான் என்ன பிழை செய்தேன் சுவாமி...?' - கேட்டது.

''சங்கரா...! என் சேவைக்காகப் பிறந்தவன் அல்ல நீ. இந்த உலக நன்மைக்காக அவதாரம் எடுத்தவன் நீ... அதனால்தான் சொல்கிறேன். நீ பிரிந்தாக வேண்டும் என்று... புறப்படு...''

கண்கள் கலங்க, 'நான் எங்கே போவது?' என்பதுபோல் பார்த்தார்.

''கங்கைக் கரையிலுள்ள காசி நகருக்குச் செல். அத்வைதத் தத்துவத்தை நிலைபெறச் செய்யப் பிறந்தவன் நீ...! அதற்கு காசியே சிறந்த இடம். உன் பயணம் தொடரட்டும்; வெற்றி கிட்டட்டும்; சென்று வென்று வருக!''

குருவின் கட்டளையை ஏற்று, அவரின் பாதக் கமலங்களைப் போற்றி, சங்கரர் காசியை நோக்கி நடந்தார்.

□□□

## 7. பக்தியும் பரவசமும்!

**கா**சி நகர்.

காவியணிந்த ஞானிகளின் திருக்கூடம். பரமேஸ்வரியும், பரம்பொருளும் எழுந்தருளியிருக்கும் புண்ணிய பூமி.

அப்பூமியில் காலடி வைத்தார் சங்கரர்.

காசிக்கு வந்த சங்கரர், கோவிந்த பகவத் பாதர் அருளிய அத்வைத தத்துவத்தையே உபதேசிக்கலானார்.

வேதம், உபநிஷதம், பிரம்ம சூத்திரம், கீதை ஆகியவற்றில் கூறப்பட்டிருக்கும் தத்துவமே அத்வைதமாகும்.

பழமையான இத்தத்துவத்தை தொகுத்தும், வகுத்தும், எளிமையாகவும், தெளிவாகவும், யாவரும் அறியும்படியும் விளக்கியவர் சங்கரர்.

இந்து மதத்தில் பிரிந்து கிடந்த பலவாறான கருத்துக்களை ஒருங்கிணைத்து, அதற்கு உருவமும், சிறப்பும் கொடுத்தவர், சங்கரர்.

அக்காலத்தில் இருந்து வந்த மற்ற சமயங்களில் இருந்துவந்த குறைபாடுகளைக் களைந்து, நிறைகளை உண்டாக்கினார். அதற்காக ஆறு வகைச் சமயங்களை ஏற்படுத்தினார். அது மதம் எனப்பட்டது. அளவில்லா பரம்பொருளை ஓர் எல்லைக்குள் கொண்டு வந்து அமைப்பதே இந்த ஆறு சமயமாகும். இதனால் ஷண் மதத்தைத் தோற்றுவித்த புகழுக்குரியவராக சங்கரர் போற்றப்படுகிறார்.

குருவின் கட்டளையை ஏற்று காசிக்கு வந்த சங்கரர், அங்கு அத்வைத தத்துவத்தையும், உபநிஷதங்களையும் அன்பர்களுக்குப் போதித்து வந்தார். மக்கள், கூட்டம் கூட்டமாக வந்து அவரின் அருளுரையை, ஆன்ம ஞான வெளிப்பாட்டை கேட்டு இன்புற்றனர்.

இப்படி ஒருநாள் சங்கரர் அன்பர்களுக்கு அருளுரையை வழங்கிக் கொண்டிருக்கும் வேளையில், சோழ நாட்டு இளைஞன் ஒருவன் ஆச்சாரியாரின் கமலப் பாதங்களை வணங்கி நின்றான். அவன் பெயர் சனந்தனன் என்பதாகும்.

காலப்போக்கில் அவன் சங்கரரின் ஆத்ம சீடனாக ஆனான். குருவின் அன்பிற்குப் பாத்திரமான சனந்தனனின் மீது மற்ற சீடர்களுக்கு காழ்ப்புணர்ச்சி தோன்றியது.

எல்லாம் அறிந்த சங்கரருக்கு அந்த நிலை தெரியாமல் இருக்குமா என்ன...? தெரிந்தும் தெரியாத நிலையில் அவ் வேளைகளில் புன்னகை பூத்துக் கொண்டிருந்தார் மகான் சங்கரர்.

தான் சனந்தனனின் மேல் மட்டுமே அதிக அன்பு காட்டுவதாக சீடர்களின் மனம் பொறாமைத் தீயாக எரிவதைக் கண்ட சங்கரர், இதற்கு ஒரு வழிவகை செய்தாக வேண்டுமே என்று எண்ணினார். அதன்படியே ஒருநாள்...

வழக்கம் போல் சீடர்களோடு கங்கைக்கு நீராட சென்றார், சங்கரர்.

கங்கையில் இறங்கிய சங்கரர், நீந்தி குளித்து மகிழ்வோடு இருந்தார். எதிர்க்கரையில் சங்கரர் குளித்து உடுத்த வேண்டிய ஆடைகளைக் கைகளில் வைத்துக்கொண்டு வழக்கம் போல் காத்துக்கொண்டு நின்றிருந்தான் சீடன் சனந்தனன்.

என்றுமே குளித்து முடித்து சனந்தனன் நின்றிருக்கும் வரையில் கரை ஏறும் சங்கரர், வழக்கத்திற்கு மாறாக மற்ற சீடர்கள் நின்றிருந்த கரையில் ஏறி, ஈர ஆடையில் நீர் வடிய வடிய நின்றிருந்தார், சங்கரர்.

'என்றுமில்லாமல் இன்று குருநாதர் ஏன் இப்படி நடந்துகொள்கிறார்...?' இந்தக் கேள்வியை இதயத்தில் எழுப்பிக் கொண்டு சீடர்கள், சங்கரரை சூழ்ந்து வணங்கி நின்றிருந்தனர்.

எல்லோரையும் ஒருமுறை அன்போடு பார்த்துவிட்டு, மறுகரையில் தமது ஆடைகளோடு நின்றிருந்த சனந்தனனை இக்கரைக்கு வருமாறு கை அசைத்தார்.

குருவின் கட்டளையை ஏற்ற சனந்தனன், அடுத்த நொடியே கங்கையை நோக்கி நடந்து வந்தான்.

மரங்களையே பெயர்த்து எடுத்து தன்னுள் சுமந்து சீறிப் பாய்ந்து ஓடிக் கொண்டிருக்கும் கங்கையாற்றில் கால் பதித்தான் சீடன் சனந்தனன்.

அதைக்கண்டு இக்கரையில் நின்றிருந்த சீடர்கள் பதறித் துடித்தார்கள். என்னவாகுமோ, ஏதாகுமோ, பயத்தோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டவர்கள், தங்கள் குருநாதரையும் பார்த்தார்கள்.

முக்காலமும் உணர்ந்த அந்த மாமுனி, ஏதும் தனக்குத் தெரியாதது போல், அறியாதது போல் உள்ளத்தில் புன்னகைத்த படியே அங்கே நின்றிருந்தார்.

சீடன் சனந்தனனோ வெள்ளப் பெருக்கான கங்கையாற்றை நடந்து கடந்து வந்து, தன் குருதேவரிடம் அவர் உடுத்திக் கொள்ள வேண்டிய ஆடைகளைக் கொடுத்தான்.

நீரிலே நடந்து வந்தும், அங்கே உடலில் நீர் படாமல் நின்றிருந்த சனந்தனனை மற்ற சீடர்கள் வியப்போடு விழிகள் பிதுங்க பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்கள்.

அப்போது அருள் ஒளியாய் அங்கு அவர்களோடு நின்றிருந்த சங்கரர், வாய் மலர்ந்தார்.

''அன்பா! இந்த ஆழமான கங்கையை எப்படி கடந்து வந்தாய்...?''

''தங்களின் ஆணையை தலைமேற் கொண்டேன். தங்களை மனதில் துதித்தபடியே ஆற்றில் காலைப் பதித்தேன். இக்கரை வந்தேன் சுவாமி!'' என்றான் சீடன், சனந்தனன்.

''அன்பனே! உன் பக்தியும், நம்பிக்கையும் என்னைப் பரவசப்படுத்துகிறது. அதே வேளையில் நீ கடந்து வந்த வழியைத் திரும்பிப் பார்...'' என்றார், சங்கரர்.

நுங்கும் நுரையுமாக பொங்கி ஓடும் கங்கைக் கரையில் எப்போதுமே பெரும் மரங்களையும், மனிதர்களையும் அடித்துக் கொண்டு ஓடுவதைப் பார்த்திருக்கும் சனந்தனனுக்கு வியப்பாக இருந்தது, அங்கே கண்ட காட்சி!

ஆமாம்! அவன் நடந்து வந்த பாதை எங்கும் புத்தம் புதிதாய் பூத்துச் சிரித்துக் கொண்டிருந்தன, தாமரை மலர்கள்.

அதைக் கண்ணுற்ற சனந்தனன், மெய்சிலிர்த்தான். குருவின் பாதக் கமலங்களைப் பணிந்து வணங்கி நின்றான்!

''சனந்தனா! எழுந்திரு... குருவின் மீது நீ கொண்ட பக்தியையும், நம்பிக்கையையும் கண்டு உன் மீது அன்பும் பாசமும் கொண்டதால்தான் அந்த கங்காதேவி தன் மீது தாமரை மலர்களைச் சுமந்து, அதில் உன்னையும் சுமக்க வைத்து காப்பாற்றி இருக்கிறாள்.

ஆகவே, பத்மம் உன் பாதங்களைச் சுமந்ததால் இன்று முதல் 'பத்மபாதர்' என்ற பெயரோடு சிறப்புறுவாய்'' என வாழ்த்தினார், குரு சங்கரர்.

சீடர் சனந்தனனை தங்கள் குருநாதர் சங்கரர் வாழ்த்தியதைக் கண்டு கூடி நின்ற சீடர்கள் அனைவரும் தங்கள் இதயத்தில் அத்தனை நாள் நச்சாய் வேர்விட்டு வளர்ந்து நின்றிருந்த காழ்ப்புணர்வு என்ற மரத்தை வேரோடு பிடுங்கி வெளியே எறிந்துவிட்டு, சனந்தனனை - இல்லை, பத்மபாதரை வாழ்த்தி நின்றனர்.

அதைக் கண்டு மகிழ்ந்தார், சங்கரர்.

❑

**கா**சியில் சங்கரரின் சமயப் பணி சுடர் தீபமாய் ஒளி வீசிக் கொண்டிருந்தது.

அவ்வேளையில்தான் பகவத் கீதை, உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரம் போன்றவற்றிற்கு உரை எழுதினார். மேலும் சுஜாதீய உரை நூலையும் எழுதினார்.

இதற்கிடையே ஹரித்துவாரம், ரிஷிகேசம், பிரயாகை, ஸ்ரீநகர், காமரூபம் போன்ற புண்ணியத் திருத்தலங்களுக்கும் சென்று திரும்பினார், சங்கரர்.

கங்கைக் கரையில் - காசி மாநகரில் சங்கரரது புகழ் ஓங்கி வளர்ந்தது. அவரது பேச்சும் செயலும் எம்மதத்தினரையும் ஈர்த்தது. உலகப் புகழ் சேர்த்தது.

கங்கைக் கரையில் சங்கரர் வாழ்வில் நடந்த அற்புதங்கள் ஏராளம், ஏராளம்!

ஒருநாள் வழக்கம் போல் கங்கைக் கரையில் நீராட சீடர்களோடு சென்றார் சங்கரர்.

ஆசைதீர ஆற்றில் நீராடி கரை சேர்ந்தார். சீடர்கள் புடைசூழ அங்கிருந்து புறப்பட்டார்.

கரையெங்கும் நிறைந்து நின்று இருந்த மக்கள் கரம் குவித்து சங்கரரை வணங்கினார்கள்.

அவரும் புன்னகை மலர, யாவருக்கும் அருளாசி வழங்கிய படியே கூட்டத்திற்கு நடுவே உதய ஆதவனாய் ஒளிவீச நடந்து கொண்டிருந்தார். அப்போது... அங்கே...

புலையன் ஒருவன் கள் அருந்திய நிலையில் ஒரு கையில் கோலும், மறு கையில் நான்கு நாய்களை கயிறில் பிணைத்துக் கட்டி அழைத்தபடியும் வந்துகொண்டிருந்தான். அவன் தோளில் கள் குடுவை ஒன்றும் தொங்கிக் கொண்டிருந்தது.

அவன் கண்கள் மாலைச் சூரியனாய் சிவந்து இருந்தது. கள்ளின் துர்நாற்றமும், புலாலின் துர்நாற்றமும் அவன் மேனியில் வீசிக் கொண்டிருந்தன. உளுந்திற்கு விளக்கெண்ணெயைப் பூசியது போல் உடல் கறுத்திருந்தது.

இந்த நிலையில் சங்கரரின் எதிரே அநாவசியமாக வந்து கொண்டிருந்தான், புலையன்.

அவன் தூர வரும்போதே, அவன் மேலிருந்து கள் வாடையும், புலால் வாடையும் கிளம்பி எதிரே வந்த சங்கரரைத் தாக்கியது. சீடர்களையும்தான்!

சீடர்கள் அறுவறுப்போடு திகைத்து நின்றார்கள்.

அதே நேரம் புலையன் திமிரோடு காட்டெருமையைப் போல் சங்கரரை மோதுவதைப்போல் எதிரே வந்து நின்றான்.

அதைக்கண்ட சங்கரர், ''குளித்து முடித்து நான் வரும்போது நீ இப்படி என் எதிரே வரலாமா? என் மீது உன்னுடல் தீண்டலாமா? தூர விலகிப் போ!'' என்றார்.

''எல்லோர் உடலும் எலும்பும், சதையும், இரத்தத்தாலும் ஆன சதைப் பிண்டங்கள்தானே? அப்படிப் பட்டுக்கொண்டால் தீட்டு வந்து எப்படி ஒட்டிக்கொள்ளும்? ஏன் ஐயா என்னை விலகிப் போகச் சொல்கிறீர்? உன் மீதும் என் மீதும் ஒரே காற்றுதானே படுகிறது? அப்படியிருக்க, நமது இரண்டு சதைக் கூடுகளும் ஒன்றை ஒன்று தீண்டினால் எப்படி தீட்டு வரும்? ஏன் என்னை விலகிப் போகச் சொல்கிறாய்?

நீயும் பிரம்மம். நானும் பிரம்மம். நீயும் கடவுள், நானும் கடவுள். ஏன் எல்லோருமே கடவுள்! பின் எப்படி நீ சொல்லும் வேறுபாடு? இதில் உயர்ந்தவன் என்ன, தாழ்ந்தவன் என்ன? இதில் அந்தணன் என்ன, அடிமை என்ன? புனிதன் என்ன, புலையன் என்ன?'' - இவ்வாறு கேட்டான், புலையன்.

புலையனின் கூற்றின் உட்பொருளை உணர்ந்தார், சங்கரர்.

இதுவரை தன் இதயத்தில் இந்த வேற்றுமை உணர்வோடு இருந்த சங்கரர், தெளிவு பெற்றார்.

நம்மிடம் கேள்விகளைப் போட்டு நிற்பவன், இவ்வுலகில் அசாதாரணமான ஆள் இல்லை என்பதை உணர்ந்தார்; தன்னிலை அறிந்தார்.

குளித்து மூழ்கி கங்கைக் கரையில் நின்ற நிலையில், வேத பண்டிதர்கள் முன்னிலையில், தனது சீடர்களின் முன்னிலையில் அப்புலையனையே குருவாக ஏற்று அவன் காலடியில் விழுந்து வணங்கினார்.

'மனீஷா பஞ்சகம்' என்ற ஐந்து சுலோகங்களை அப்போது பாடி நின்றார்.

அன்று முதல் குலத்தைவிட ஞானமே பெரிது என்றும், குலத்தின் பெயரால் மற்றவரை இழிவு செய்யக்கூடாது என்பதையும் உணர்ந்து கொண்டார்.

அந்த நிலையில், புலையனாக வந்த காசி விஸ்வநாதர் மகிழ்ச்சியோடு சங்கரருக்குக் காட்சி அளித்தார்.

அவர் அழைத்து வந்த நான்கு நாய்களும் நான்கு வேதங்களாயின. கள் குடம் கங்கையானது.

❑❑❑

# 8. மரணம் தோற்றது!

வியாச முனிவரைக் கண்டு அவரது அருளாசியைப் பெற்ற பின்னே பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுத வேண்டும் என்று விரும்பினார், சங்கரர்.

அதனால், காசியில் இருந்து இமயத்தை நோக்கி தம் சீடர்களோடு வியாசர் இருக்கும் பத்ரிகாசிரமத்தை அடைந்தார். வியாசர் அங்கில்லை. அங்கிருந்த நாராயண முனிவரைக் கண்டார்.

அவர், சங்கரரைப் பார்த்து, ''உம்முடைய செயல்கள் முடிவடைந்த நிலையில் வியாசர் உமக்கு காட்சி தருவார்'' என்று கூறி ஆசி வழங்கினார்.

இந்த நிலையில் பத்ரிகாசிரமத்தில் ஒரு விஷ்ணு ஆல'பத்தை ஏற்படுத்தி பூஜை நிகழ வழிவகை செய்த பின், அங்கிருந்து காஷ்மீரை நோக்கி நடந்தார்கள். பின் அங்கிருந்து சீடர்களோடு காசிக்கே வந்து சேர்ந்தார்.

பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதி முடித்தார். ஒருநாள் ஆசிரமத்தில் அன்பர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார், சங்கரர். அப்போது அங்கே வயது முதிர்ந்த அந்தணர் ஒருவர் வந்தார். அவர் தலைமுடி வெண் பஞ்சுபோல் நரைத்து, பழுத்த பழம் போல் தோன்றினார். அவர் பார்வை ஒளி வீச்சோடு இருந்தது. வந்தவர், அன்பர்களோடு அமர்ந்தார்.

சங்கரரைப் பார்த்துப் பேசினார்: ''தாங்கள் பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதி இருப்பதாக அறிந்தேன். நானும் அச்சூத்திரத்தை அறிந்தவன். அது குறித்து பேசலாம் என்று வந்துள்ளேன்...'' என்று மெல்ல பேச ஆரம்பித்தார்.

அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம், சங்கரர் அமைதியாக விடையளித்து வந்தார். கருத்துப் பரிமாற்றங்களில் தொடங்கியப் பேச்சு, பின் வாதப்போரில் போய் நின்றது. வாதம் நாழிகையில் தொடங்கி, நாளிலும் முற்றுப் பெறாமல், தொடர்ந்து நடக்கத் தொடங்கிவிட்டன.

சங்கரரின் சீடரான பத்மபாதர், இருவரின் தர்க்க வாதத்தையும் கவனித்துக் கொண்டு இருந்தவர், நம் குருவோடு வாதம் செய்ய வந்திருப்பவர் சாதாரண அந்தணக் கிழவர் இல்லை என்பதை தன் உள்ளுணர்வால் உணர்ந்தார்.

சங்கரரையும், அந்தணரையும் வணங்கி நின்ற பத்மபாதர், ''ஐயனே! தாங்கள் வேதப் போரை நிறுத்தி, நீவிர் யார் என்பதை எங்களுக்குக் காட்டியருள வேண்டும்!'' என்று இருவரையும் வணங்கி நின்றார்.

அதன்படியே அவர் வேண்டுகோளுக்கு இணங்க, அந்தணர் உருவில் இருந்தவர் தன் சுயரூபம் கொண்டார். சங்கரரோடு நின்று வாதிட்ட அந்தணர், அங்கே வியாச முனிவராக நின்று காட்சி யளித்தார். ஸ்ரீமத் சங்கரர் பிரம்ம சூத்திரத்திற்கு எழுதிய உரையைப் பாராட்டி மகிழ்ந்தார், வியாச முனிவர்.

அதைக்கேட்ட ஸ்ரீமத் சங்கரர், ''சுவாமி! நான் செய்ய வேண்டிய செயல் முற்றாக நிறைவு பெற்றுவிட்டது. என் வயதும் பதினாறைத் தொட்டுவிட்டது. நான் இவ்வுலகை விட்டு விடுபட வேண்டும். அதனால் தாங்கள் அருள்புரிய வேண்டும்...'' என்று வேண்டி நின்றார்.

'தன் குருவைப் பிரிய வேண்டுமா...? வியாசர் விடையாக என்ன கூறுவாரோ...?' என்று எண்ணிய பத்மபாதரின் இதயம் கலங்கிக் கொண்டிருந்தது. கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். இருவரையும் வியாச முனியும் பார்த்தார்.

''சங்கரா! உம் ஆயுளை இன்னும் பதினாறு ஆண்டுகள் கூட்டியுள்ளேன். நீர் என் பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதியது மட்டும் நிறைவாகாது. அதன் தொடர்பான அத்வைதத்தை உலகெங்கும் சொல்ல வேண்டும்; உணர்த்த வேண்டும்; பரப்ப வேண்டும்.

அந்த வேளையில், அதை எதிர்ப்பவரை எதிர்நின்று வாதிட்டு வெல்ல வேண்டும்; எதிரிகளின் கொள்கைகளை மறுத்து ஒதுக்க வேண்டும்; அவர்கள் உண்மைப் பொருளை உணரச் செய்ய வேண்டும். நாடெங்கும், நகரெங்கும், உலகெங்கும் மடங்கள் இடம் பெற வேண்டும்; வேதப் பயிர்கள் முளைவிட வேண்டும்; ஞான உபதேசம் ஒளிபெற வேண்டும்; திக்கெல்லாம் திருப்பணி; அறப்பணி தொடர்ந்திட வேண்டும். இப்பணி சிறக்க உம்மை நான் பணிக்கிறேன்; வாழ்க! உன் பணி தொடர்க...!'' என்றே சொல்லி வியாச முனிவர் விண்ணகம் சேர்ந்தார்.

வியாச முனிவரின் விசாலமான இதயம் உணர்ந்த சங்கரர், அவரின் கட்டளையை நிறைவேற்ற தேசம் முழுதும் தெய்விகப் பணியைத் தொடர்ந்தார்; நடந்தார்.

☐☐☐

# 9. பிரயாகையில்...

அவரின் பயணம், பிரயாகையில் போய் நின்றது.

அவர் அங்கே சென்ற வேளையில், ஊரே தீப்பிடித்து எரிகின்ற நிலையில் மக்கள் பதட்டத்தோடு பதறிக்கொண்டு இருந்தார்கள். வீதிகள்தோறும் கூடி நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவ்வூரில் யாரைப் பார்க்க வேண்டும் என்று ஸ்ரீமத் சங்கரர் வந்தாரோ, அவரைப் பற்றிய பேச்சாகவே இருந்தது.

''குமாரில பட்டர் 'துஷாக்கினி பிரவேசம்' செய்து விட்டாராமே...!''

இத்தீச் செய்தியைக் கேட்டதும் இதயம் கனக்க ஓடினார் அங்கே சங்கரர்.

(நெல் உமியைக் குவித்து அதில் நெருப்பை மூட்டி, அதனிடைப் புகுந்து உயிர் துறத்தலே - துஷாக்கினி பிரவேசம் என்பது.)

குவிந்த உமி நெருப்பில் குமாரில பட்டர் குந்தியிருப்பதைக் கண்டு பதறிப்போனார் சங்கரர்.

உமி நெருப்பிற்கு தன்னை உள்ளாக்கி அமர்ந்திருந்த குமாரில பட்டரை அருள் வழியும் கண்களில் நீர் வழிய ஸ்ரீமத் சங்கரர் பாசமுடனும், பரிவுடனும் கேட்டார். ''ஏன் இந்த கொடும் தண்டனை...?''

''குரு துரோகத்திற்கு இதுவே ஏற்ற தண்டனையாகும். எனக்கு நானே வழங்கிக் கொண்ட தீர்ப்பு இது...!''

''என்ன சொல்கிறீர்...?''

''இனியே, என் நிலை அறிக!'' என்றார் பட்டர்.

கர்ம மார்க்கத்தை அனுஷ்டிக்கும் பூர்வ மீமாம்சகர் கர்மத்திலிருந்து எவரும் விடுபட முடியாது. வேதமே அவர்களுக்கு பிரமாணம் என்ற கொள்கையுடையவர், குமாரில பட்டர்.

மீமாம்சகர்கள் வேதத்தின் ஒரு பகுதியாகிய கர்ம காண்டத்தை மட்டும் ஏற்பவர், கடவுளை ஏற்காதவர்கள். ஆனால் கர்மாவை உறுதியாக நம்புகிறவர்கள்.

இக்கொள்கையினை பௌத்தர்கள் ஏற்கவில்லை; அதனால் எதிரிகளாயினர்.

பட்டர், பௌத்த மதக் கொள்கையைப் பொய்யாக்க நினைத்தார்.

அதனால் அவர்களின் கொள்கைகளை முழுதும் அறிய விரும்பினார்.

புத்த விகாரத்தில் பட்டர் சேர எண்ணினார். அந்தணராக இருந்தால் அங்கே எப்படி நுழைவார்? கல்வி பயில்வார்?

ஆடை மாற்றினார்; வேடம் மாற்றினார்; பௌத்தராக நடிக்கத் தொடங்கினார். பௌத்த விகாரத்தில் கல்வி பயில மாணவராக சேர்ந்தார்.

சிறிது நாளிலேயே பௌத்தத்தைப் பற்றியும், குருமார்களைப் பற்றியும் முழுமையாகத் தெரிந்துகொண்டார், பட்டர்.

கொஞ்ச நாளிலேயே குமாரில பட்டரின் நோக்கும் போக்கும் பௌத்தவிகார் முழுவதும் வெளிச்சமாகிவிட்டன.

நம்மைப்பற்றி கொஞ்சமல்ல, நிரம்பவே அறிந்துகொண்ட இவரைத் துரத்திவிடுவதா? இல்லை தூக்கில் தொங்கவிடுவதா?

பூச்சிகளையும் கொல்ல நினையாத புத்த பிட்சுகளின் மனக்குரங்கு அப்படியும் இப்படியும் தாவிக்குதித்தன.

புத்தக் குருக்களெல்லாம் ஒன்று கூடினார்கள். சதித்திட்டம் தீட்டினார்கள். பட்டரை எப்படி பலியிடலாம் என்று முடிவெடுத்தார்கள்.

அதன்படியே பௌத்தவிகாரின் ஏழாவது மாடியில் இருந்து கீழே தள்ளி விடுவது - அவரின் உயிரைப் போக்குவது என்று தீர்மானித்தனர்; அதன்படியே செய்தனர்.

குமாரில பட்டர் மேல் மாடியிலிருந்து தள்ளப்பட்டு கீழ்நோக்கி வந்துகொண்டிருந்தார்.

வேதத்தை உயிர் மூச்சாக நம்பி வாழும் நமக்கு எப்படி துன்பம் வந்து சேரும்...? வேதம் ஒருபோதும் நம்மைக் கைவிடாது.

மனம் உறுதி கொண்டது. மேலே இருந்து மண்ணை நோக்கி கீழே... கீழே... வந்து கொண்டு இருக்கிறார்... அவர் மனம்...

'வேதம் உண்மையானதாக இருக்குமானால் எனக்கு துன்பம் வரக்கூடாது...' என்று எண்ணியது.

அவர் எண்ணியது போலவே எலும்பு முறியாமல், நரம்பு அறாமல், உயிர் நீங்காமல் பிழைத்தார்.

சிறிது கண்ணில் மட்டும் சிறு கல் பட்டு காயம் ஏற்பட்டு விட்டது. அவ்வளவுதான்...

உள்ளம் நொந்தார்; கோபத்தின் குன்றேறி நின்றார்!

'என் கண்ணாக; உயிர் மூச்சாக வேதத்தை நான் நம்பி இருந்தேன். அப்படி இருந்தும் என் கண்ணைக் காப்பாற்றாது விட்டுவிட்டதே!' என்று மேலும் கோபம் கொண்டார்.

அப்போது அசரீரி அங்கே ஒலித்தது. 'வேதம் உண்மையானது என்று நினைக்காமல், உண்மையாக இருக்குமானால் என்று சந்தேகங் கொண்டதாலேயே இத்துன்பம் ஏற்பட்டது' என்று கூறியது. அதைக்கேட்டு உள்ளம் தெளிந்து போனார்.

இந்த நிலையில் பௌத்தர்களை வாதத்திற்கு அழைத்தார், பட்டர். அவர்களும் வந்தார்கள்; வாதிட்டார்கள்.

அவர்கள் மதத்தை அவர்களிடமே பயின்று இருந்த காரணத்தால் வாதத்தில் வழுக்கல் இல்லாமல் வெற்றி பெற்றார். அது அவருக்கு வானவில் மகிழ்ச்சிதான்.

அதே நேரம் அவரைத் தொற்றிக் கொண்டது கவலை. காரணம், பௌத்தர்களிடம் மறைமுகமாக பள்ளியில் சேர்ந்து, கல்வி கற்றார்.

அப்படி என்றால், அவர்கள் யார்? குருவிற்குச் சமமான வர்கள்தானே...?

அதனால்தான் குரு துரோகமாக எண்ணி அதற்கு பிராயச் சித்தம் தேடி 'துஷாக்கினி' பிரவேசம் மேற்கொண்டார்.

தன் வாழ்க்கைப் பதிவை வாய் மலர்ந்து சொன்னார், பட்டர்.

சங்கரர் மனம் நெகிழ கேட்டுக்கொண்டு இருந்தவர், பட்டரிடம் சொன்னார்:

''நாம் ஒரு கர்மாவைச் செய்கிறோம் என்ற எண்ணத்துடன் செய்தால் கர்மம் நம்மைப் பற்றுகிறது. அதையே ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்தால் அது நம்மைப் பற்றுவது இல்லை.''

சங்கரர் சொன்ன தத்துவ முத்துக்களைக் கேட்டதும் குமாரில பட்டரின் இதயம் மகிழ்ந்தது; குளிர்ந்தது.

பட்டரோ இதுநாள் வரை கர்மாவை - மனிதனாகப் பிறந்தவன் உதறி எறிய முடியாது என்றே நம்பி இருந்தவர், கர்மாவை உதறிய ஞானிகளை அவர் வன்மையாகக் கண்டித்தவர், அவருக்கு இப்போது சங்கரர் கூறிய வார்த்தைகள் சரியாகப் பட்டது.

பின் பட்டரிடம் அத்வைத தத்துவத்தை சங்கரர் கூறி நின்றார்.

நெருப்பில் நெய்யாக உருகிக் கொண்டு இறக்கும் நிலையில் இருந்த பட்டர், ''சுவாமி! இந்த நிலையிலேயாவது அடியேன் அத்வைதத்தை நான் கேட்கும் வாய்ப்பினைப் பெற்றதற்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

என் இறுதி காலத்தில் நான் கேட்ட இந்த தத்துவத்தால் எனக்கு எப்பயனும் வந்துவிடப் போவதில்லை. என் உடம்பு உருகிக் கொண்டிருக்கிறது.

அதனால், என்னைவிட உறுதிப்பாடு கொண்ட மீமாம்சகர் ஸ்ரீமண்டலமிச்சரரை அணுகிச் சொன்னால், அதன்வழியே பல மீமாம்சகர்கள் அத்வைத நெறிதன்னை ஏற்பார்கள். அதனால், உடனே அவரைச் சென்று காணுங்கள்'' என்று வேண்டி நின்றார். அதே நிலையில், தீ அவரைத் தின்று முடித்தது.

குமரில பட்டரின் வேண்டுகோளை இதயத்தே ஏந்தியபடியே ஸ்ரீமண்டலமிச்சரரைக் காண - தம் சீடர்களோடு மாஹிஷ்மதி நகரை நோக்கிப் புறப்பட்டார், சங்கரர்.

☐☐☐

# 10. வேத விவாதம்

சங்கரர் மாஹிஷ்மதியை வந்தடைந்தார்.

இந்த நகரில், மண்டலமிச்சரரின் இல்லத்தை எங்ஙனம் காண்பது...?

எதிரே வந்தவரிடம் கேட்கப்பட்டது.

''கிளிகள் ஒன்றுகூடி எந்தத் திண்ணையில் விவாதம் செய்து கொண்டிருக்கின்றனவோ, அந்த வீடுதான் மண்டலமிச்சரரின் வீடு'' என்றார்.

அருமையாக அடையாளம் கூறியதால் எளிதாக அவர் வீட்டை அடைந்தார்கள்.

ஆனால், கதவு சாத்தப்பட்டிருந்தது.

'கீச்... மூச்'சென்று திண்ணையில் கிளிகள் கத்திக் கொண்டிருந்தன.

சங்கரர் குரல் கொடுத்து அழைத்தார். யாரும் வரவில்லை.

சங்கரரின் குரல் கேட்ட கிளிகள் அவைகளின் குரலை நிறுத்திவிட்டன.

மீண்டும் அழைத்தார். கதவு திறக்கப்படவில்லை. ஆனால் உள்ளே சொல்லும் மந்திர ஒலி மட்டும் தெளிவில்லாமல் கேட்டது.

கதவை நெருங்கி சங்கரர் காதுக்கு வேலை கொடுத்தார்.

இப்போது திவச மந்திரங்கள் ஓதுவதைத் தெளிவாகக் கேட்டார், சங்கரர்.

திவசம் கொடுப்பது சங்கரருக்கு ஏற்புடையதல்ல. பரலோக கருமாக்கள் துறவிகளுக்கு கிடையாது என்ற கருத்தை உடையவர், சங்கரர்.

இதுதான் சமயம். வாதப்போரை வகையோடு தொடங்கி விடலாம். எப்படி உள்ளே செல்வது?

சிந்தித்தவர்க்கு, வீட்டின் அருகே இருந்த தென்னை மரம் விடையாக நின்றது. தென்னை மரத்திடம் சென்று நின்றார். அதனிடம் மந்திரம் ஓதினார்.

தென்னை வளைந்து வணங்கியது. பிறகென்ன? அதைப் பற்றிக்கொண்டு அவ்வீட்டு முற்றத்தில் போய் இறங்கிக் கொண்டார்.

திடீர் என்று சங்கரரைக் கண்டதும் மந்திரங்கள் நின்றன.

இவர் எப்படி இந்த வேளையில் இங்கு வந்தார்...?

திவச நாளில் துறவிகளைப் பார்ப்பது நல்லதல்ல என்ற கொள்கை கொண்டவர், மண்டலமிச்சரர்.

திவச நாளில் கோபம் கொள்ளக்கூடாது என்ற நியதியையும் மறந்து, நெருப்பாய்ப் பார்த்தார், சங்கரரை.

''எப்படி வந்தீர்...?''

தான் வந்த வழியைச் சொன்னார்.

''வரம்பு மீறி உள்ளே வந்திருக்கிறீர் என்பதை நீர் உணர வில்லையா...?''

''விருந்தோம்பும் பண்பை மறந்து நீர் வாயிலை அடைத்து வைத்தது அநீதி இல்லையா...?'' - அமைதியாகக் கேட்டார்.

உணவருந்துவதற்காக வீட்டிற்குள் அமர்ந்திருந்த அந்தணர்கள், இருவரின் பேச்சைக் கேட்டு அச்சம் கொண்டனர்.

திதி காலத்தில் கோபம் கொண்டு பலனை மண்டலமிஸ்சரர் இழந்து விடுவாரோ என்ற எண்ணத்தில், அங்கு உணவருந்த வந்திருந்த அந்தணர்கள் இருவரையும் சமாதானம் செய்து வைத்தனர்.

ஜைமினி முனிவர் சொன்னதைக் கேட்காமல், மண்டலரால் இருக்க முடியுமா? குருவாயிற்றே!

மண்டலர் விருப்பம் இல்லாத நிலையில், சங்கரரை வணங்கி, பிட்சை ஏற்கும்படி அழைத்தார்.

''நான் இங்கு வந்தது பிட்சை பெற அல்ல. வாதம் செய்யவே வந்துள்ளேன்'' என்றார், சங்கரர்.

அதைக்கேட்ட மண்டலர், ''அப்படியா? மிக்க மகிழ்ச்சி யடைகிறேன். உணவிற்குப் பின் நம் வேத வாதத்தை வைத்துக் கொள்வோம். இப்போது உணவருந்தலாம், வாருங்கள்...'' என்று அன்போடு அமரச் செய்தார்.

உணவு வேலை முடிந்தது. வாதத்திற்கு இருவரும் அமர்ந்தனர்.

அப்போது அவர்களுக்கு இடையே ஒரு கேள்வி எழுந்து நின்றது. சிறிது நேரம் மௌனம் நிலவியது. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

நடக்கப்போகும் வாதத்தின் வெற்றி தோல்வியை யார் தீர்மானிப்பது? நடுவர் ஒருவர் வேண்டுமே! அதுவும், வேதம் அறிந்த வித்தகராக இருக்க வேண்டுமே...!

''இந்நகரில் நீங்கள் யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம்'' மனம் திறந்தார், மண்டலர்.

''நான் இங்கே புதியவன். தங்கள் விருப்பம் போலவே செய்யலாம். எனக்கு முழு சம்மதமே!'' - சங்கரர் கூறினார்.

மண்டலரின் மனைவி மதி நுட்பம் பெற்றவள்; வேதங் களையும் அறிந்த பத்தினி. அவளையே நடுவராக நியமிக்கலாம் என்று மண்டலர் தன் எண்ணத்தைச் சொன்னார்.

''அதற்கு பூரண சம்மதம்'' என்றார், சங்கரர்.

இல்லறமே நன்று, துறவறம் நன்றன்று. கருமமே செய்ய வல்லது. இதற்கு கடவுள் தேவை இல்லை என்பது மண்டலரின் கொள்கை.

இதற்கு நேர்மாறானது சங்கரரின் கொள்கை. கருமப்பலனில் பற்று கொண்டவர், இவர்.

இருவேறு கொள்கைகளையும் கொண்ட இருவரும் வாதத்தில் மோதும் முன், இச்செய்தியை அறிந்து ஊர் மக்கள் அங்கே கூடிவிட்டனர்.

வாதத்தில் தோற்பவர் ஏற்பது என்ன? வென்றவர் பெறுவது என்ன? வாதத்திற்கு முன் இரண்டாவது கேள்வி இப்படி எழுந்து நின்றது!

இதற்கு சங்கரரே விடை வைத்தார். ''நான் வெற்றி அடைந்தால் மண்டலர் இல்லறம் விட்டு துறவறம் கொள்ள வேண்டும். மண்டலர்

வெற்றி அடைந்தால் நான் துறவறம் துறந்து இல்லறம் புக வேண்டும். மண்டலர் சீடராக வேண்டும். இல்லை, மனைவியைப் பிரிந்து தேசம் முழுதும் திரிந்து அத்வைதத்தைப் பரப்ப வேண்டும்.''

அன்றலர்ந்த மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகள் வந்தன. இருவரும் அணிந்தனர். வாதத்தைத் தொடங்கினர்.

கடுமையாக வாதம் தொடர்ந்துகொண்டு இருந்தன. அனுஷ்டான நேரத்திலும், உணவு வேளையின்போது மட்டும் வாதம் நிறுத்தப்பட்டது.

இருபத்தோரு நாட்கள் தத்துவ வாதம் தொடர்ந்து நடந்தன. இருவர் வாதமும் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தன.

இருவரும் அவரவர் கொள்கையை அலசி ஆராய்ந்து தெளிவுபடுத்திவிட்டனர்.

இப்போது வாதத்தில் யார் வெற்றி பெற்றார் என்ற தீர்ப்பு மட்டுமே...

அந்த நிலையில் தீர்ப்பு சொல்ல சரசவாணி அங்கே வந்தாள். தன் கணவரான மண்டலரையும், சங்கரரையும் சரசவாணி பார்த்தாள். பின் அவர்கள் அணிந்திருந்த மாலைகளையும் கூர்ந்து கவனித்தாள்.

சரசவாணி தீர்ப்பளித்தாள்... சங்கரரே வெற்றி பெற்றதாக.

எப்படி இந்தத் தீர்ப்புக் கூறப்பட்டது? என்று அங்கே கூடியிருந்தவர்கள் திகைத்திருந்தனர்.

எப்படித் தீர்ப்பளித்தாள் சரசவாணி...?

வாதம் தொடங்கும் முன் இருவருக்கும் சூடிய மாலைகளைப் பார்த்தாள். தன் கணவர் சூடிய மாலை வாடி இருந்தன. சங்கரர் சூடிய மாலையே அவர் அணிந்து கொண்டபோது எப்படி இருந்ததோ, அப்படியே வாடாதிருந்தது.

தன் கணவர் மண்டலர் வாதம் புரிந்த வேளையில் உடல் வெப்பம் கொண்டதால், அவர் அணிந்திருந்த மாலை வாடிக் கருகியது.

அதே நேரம் குளிர்ந்த உள்ளம் கொண்ட சங்கரரின் மாலை புத்தம் புதியது போல் வாடாமல் வதங்காமல் இருந்தது.

இந்த நிலையை உணர்ந்துதான் சரசவாணி தீர்ப்பளித்தாள்.

அவள் ஒழுக்க நெறியில் நின்று தீர்ப்பு அளித்தாளே தவிர, அவளது உள்ளம் தீயாய் பற்றி எரிந்து கொண்டிருந்தது. காரணம்...

சங்கரர் வென்றதால் அவள் கணவர் மண்டலர் வாதத்தின் விதிப்படி துறவு மேற்கொள்ள வேண்டும்; அத்வைத கொள்கையை தேசம் முழுதும் பரப்பி வர வேண்டும்; தன்னைப் பிரிய வேண்டும் என்பதால்தான்.

எந்த மனைவி தன் கணவர் துறவு மேற்கொள்வதை விரும்புவாள்...? வேதனைப்பட்டு விம்மி அழுதாள்.

தன் கணவர் மண்டலர் காவி உடுத்தி, துறவு ஏற்க வேண்டிய நிலை வந்தது.

சங்கரரின் முன்னே சென்ற சரசவாணி, ''வாதத்தில் என் கணவரை மட்டும் வென்றது வெற்றியாகாது. என்னையும் வென்றால்தான் முழு வெற்றியை நீர் பெற்றதாகும். என் கணவரின் உடலிலும், உயிரிலும் பாதி நானல்லவா?'' என்ற கேள்வியோடு நின்றாள்.

சரசவாணியின் பதிபக்தியைக் கண்டு மகிழ்ந்தபடியே, வாதத்திற்குச் சம்மதம் தெரிவித்தார், சங்கரர்.

சரசவாணி சகல கலைகளிலும் வல்லவளாகவே இருந்தாள். அதனால் கேள்விகளை அடுக்கடுக்காக கேட்டுக்கொண்டே இருந்தாள்.

சங்கரரும் அவள் கேள்விகளுக்கு சளைக்காமல் பதிலளித்துக் கொண்டிருந்தார்.

தான் கேட்கும் அனைத்து கேள்விகளுக்கும் சங்கரரின் சரியான பதில்களால் தடுமாறினாள், வாணி.

எந்தக் கேள்வி கேட்டாலும் பதில் கொடுக்கும் சங்கரரை எப்படி வாதத்தில் வெல்வது என்று சிந்திக்கத் தொடங்கினாள், சரசவாணி.

வாதத்தில் தோற்று தன் வாழ்க்கைத் துணைவனை இழப்பதைக் காட்டிலும், கொஞ்சம் வரம்பு மீறி நடப்பதில் தவறு ஒன்றும் இல்லை என்ற எண்ணத்தில் தள்ளப்பட்டாள், சரசவாணி.

இளமை முதலே துறவை ஏற்றுக்கொண்ட சங்கரருக்கு எல்லாக் கலைகளும் கைவரப்பெற்றாலும் இல்லக்கலை ஏதும் தெரியாது

என்பதை உணர்ந்த சரசவாணி, தன்னை மறந்தாள். சங்கரர் போற்றத்தக்க துறவி என்பதையும் மறந்தாள்; சுற்றுச் சூழ்நிலைகளை மறந்தாள். தன் வெற்றியை மட்டுமே நினைத்தாள். அதனால், இல்லற வாழ்வில் உடலுறவு குறித்து ஒரு கேள்வியை நாணத்தோடும், அச்சத்தோடும், கூச்சத்தோடும் தூக்கிப் போட்டாள், சங்கரர் முன்னே.

அவ்வளவுதான்! கூடி இருந்தவர்கள் அதிர்ந்தனர். சங்கரர் அக்கேள்வியால் அடிபட்டு தலைகுனிந்து கொண்டார்.

சரசவாணியின் கேள்விக்குப் பதில் சொன்னால், சங்கரர் துறவு இல்லை என்ற நிலை வந்துவிடும்.

பதில் சொல்லாமல் விட்டாலோ, இல்லற வாழ்வில் இணைந்திட வேண்டும்.

இருதலைக் கொள்ளி எறும்பு நிலையில் இருந்தார், சங்கரர்.

இதுவரை, வாதப் போர்களில் வாகை சூடி வலம் வந்த சங்கரரின் இதயம் வலைபட்ட பறவையாய் துடித்தது; துவண்டது!

சங்கரர், சரசவாணியை விழித்துப் பார்த்தார். அவரின் பார்வை வெளிச்சத்தில் வாணி பயந்து போனாள்.

தன் சிற்றறிவை எண்ணிச் சிறுத்துப் போனாள். தன்நிலை உணர்ந்து, தலை குனிந்தாள்; வாய் மலர்ந்தாள்.

"என் கேள்விக்குத் தாங்கள் இப்போதே பதில் கூற வேண்டும் என்பதில்லை; சிறிது காலம் எடுத்துக் கொள்ளலாம்...!"

வெற்றியும் தோல்வியும் அற்ற நிலையில் அவளின் வார்த்தைகள் வெளிவந்தன.

சங்கரர் அப்போதைக்கு அங்கிருந்து சீடர்களோடு பயணப் பட்டார்.

❐❐❐

# 11. வென்றார்...

பிரச்சனைகள் என்று வந்துவிட்டால் பிட்சாந்திகளுக்கும் மனச்சுமை கூடிவிடும்.

நேற்று வரை நிர்மலமாக இருந்த சங்கரரின் உள்ளம், சரசவாணியுடன் நடத்திய வாதத்தில் கலங்கிப்போயிருந்தது. வாணியின் கேள்விக்கு என்ன பதில்? அதை எப்படி அறிவது? எப்படி தேடுவது? என்ற போராட்டமான மனதோடு, அடர்ந்த காட்டு வழியே சீடர்களோடு நடந்து கொண்டிருந்தார், சங்கரர்.

ஊர் வழியே, நகர் வழியே செல்வதைக் காட்டிலும், காட்டு வழியே செல்லும் பயணம் அவர் மனதுக்கு ஆறுதலாக இருந்தது.

பலவித பறவைகளின் ஒலியையும், விலங்குகளின் ஒலியையும், சூரிய ஒளி உட்புகாத அடர்ந்த காட்டிலே நடந்து கொண்டு இருந்த சங்கரரின் விழிகளிலே ஓர் உருவம் தட்டுப்பட்டது. அவ்வுருவை நோக்கி சீடர்களோடு அங்கே நடந்தார்.

ஆடை, அணிகலன்கள் அணிந்த நிலையில், வில்லும், அம்பும் தாங்கிய நிலையில் ஒருவன் படுத்திருந்தான்.

சங்கரரோடு, சீடர்களும் அவனைக் கண்டார்கள்.

"எந்த நாட்டு அரசன் இப்படி இங்கே தனியே வந்து தூங்குகிறான்...?"

"அவன் தூங்கவில்லை. அவன் ஆன்மா பிரிந்து போய் விட்டது. என் பிரச்சனைக்கும் விடை கிடைத்துவிட்டது." மகிழ்ந்தார் சங்கரர்.

குருவின் பேச்சு சீடர்களுக்குப் புரியவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"அன்பர்களே! சரசவாணிக்கு நான் பதில் சொல்லும் காலம் வந்துவிட்டது. ஜீவனைப் பிரிந்து இதோ இங்கே கிடக்கும் இவன் ஓர் அரசன். அமருகன். இறந்து கிடக்கும் இவனின் உடலில் நான் புகுந்து அந்த தேகத்தின் வாயிலாக இல்லற இன்ப இரகசியத்தை அறிவேன். வாணிக்கு விடை பகர்வேன்.

பத்மபாதா! நான் திரும்பி வரும்வரை என்னுடலை பாதுகாப்பாக பார்த்துக் கொள்வது உங்கள் கடமை... என்றவர் -

தம் கால் கட்டை விரலிலிருந்து பிராணனை வாங்கி வெளியே செலுத்தி அரசன் அமருகன் உடலினுள் புகுந்தார்.

அவர் கூறியது போலவே உயிர் நீங்கிய சங்கரர் உடலை சீடர்கள் ஒரு குகையில் பாதுகாப்பாக வைத்து காத்தனர்.

❑

அரசன் அமருகன் உயிர் பெற்று எழுந்து தன் நாடு சென்றடைந்தான்.

மன்னனைக் கண்ட மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

மன்னனின் பேச்சிலும், செயலிலும் அரண்மனையில் இருந்தவர்கள் மாறுதலைக் கண்டனர்.

அரண்மனையில் எல்லா செயல்களும் முறைப்படியும், நல்ல முறையிலும் நடைபெற்றன.

அமைச்சர்களுக்கும், அரசனின் பாதுகாப்பாளர்களும் மன்னனின் நடவடிக்கையால் திகைத்து இருந்தனர்.

வறியவர்களுக்கு வாரிக் கொடுப்பதும், ஆன்மிகச் சிந்தனையில் ஈடுபடுவதும், நாட்டில் நல்ல பல திட்டங்களைத் தீட்டுவதுமாக இருந்தான்.

காலப்போக்கில் அமைச்சர்களுக்கும், சோதிடர்களுக்கும் அரசனின் மாறுதலுக்கான காரணம் புரிந்துவிட்டது. அவர்களுக்கு மகிழ்ச்சியும் கூடிவிட்டது.

ஞானி ஒரு கூடுவிட்டு கூடு பாயும் வித்தையால் நம் அரசரின் உடலில் புகுந்திருக்கிறார்.

நம் அரசரின் நிலை இப்படியே இருந்தால் நாடு நலம் பெறும். ஆகவே, எப்படியாகிலும் அந்த ஞானியின் உடலைத் தேடிக் கண்டுபிடித்து அழித்து ஒழித்துக் கட்ட வேண்டும் என்று முடிவெடுத்தனர்.

அதன்படியே காடு மேடுகளைச் சுற்றித் தேடத் தொடங்கினார்கள். இறுதியில் அலைந்து திரிந்து ஒரு வழியாக சங்கரரின் உயிரற்ற உடலைக் கண்டுபிடித்துவிட்டார்கள்.

அதுநாள் வரை பாதுகாத்து வந்த சீடர்கள் என்ன செய்வது ஏது செய்வது என்று புரியாமல் தவித்துப் போனார்கள்.

அந்த நிலையில் சீடர்கள் அரண்மனைக்கு ஓடினார்கள். மன்னன் அமருகன் உருவிலே இருந்த சங்கராரிடம், வண்டுக்கு உரைப்பதுபோல மறைபொருளாக உரைத்து நின்றார்கள்.

அந்த நிலையிலேயே சங்கரர் மன்னனின் உடலில் இருந்து வெளிப்பட, மன்னன் வேரற்ற மரம்போல் பிணமாக சாய்ந்தான்.

அவன் உடலில் இருந்து வெளிப்பட்ட சங்கரரின் ஆன்மா தன் உடலைத் தேடி நாலா பக்கமும் அலைந்தது.

அதே நேரம் அவர் உடலைக் கைப்பற்றியவர்கள் சிதையில் வைத்து தீ மூட்டிக் கொண்டு இருந்தார்கள்.

வெளியில் அலைந்து கொண்டு இருந்த ஆன்மா வேகமாக சென்று உடலுக்குள் நுழைந்ததும் சங்கரர் தீயினின்றும் எழுந்து வெளியே வந்தார்.

இருந்தும் வலக்கையைத் தீ தீண்டிவிட்டது. கரியாகிவிட்டது.

அதைக் கண்டு சீடர்கள் துடித்துப் போனார்கள். அந்த நிலையில் பத்மபாதரின் வேண்டுகோளின்படி லட்சுமி நரசிம்ம மூர்த்தியை வணங்கி கையைத் திரும்பப் பெற்றார், சங்கரர்.

வாதத்தில் இல்லற வாழ்வில் கேட்ட கேள்விக்குப் பதிலைச் சொல்ல மண்டலமிச்சரர் வீட்டை நோக்கிச் சென்றார், சங்கரர்.

சங்கரரின் வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருந்த மண்டலர் ஓடோடி வந்து வணங்கி வரவேற்றார்.

பின் சரசவாணியிடம் வாதிட்டார். அவள் தோல்வியுற்றார்.

மண்டலர் சங்கரரின் சீடரானார். பின் அவரே சுரேஸ் வராசாரியார் என்ற பெயர் நாமத்தோடு அழைக்கப் பெற்றார்.

அமருகன் மன்னனாக இருந்து வாழ்ந்த நிலையில் அறிந்த இல்லற இன்பத்தைப் பற்றி 'அமருகம்' என்ற ஒரு நூலை எழுதி வெளியிட்டுள்ளார், சங்கரர்.

சரசவாணி, தன் கணவரை பிரிந்த நிலையில் உயிர் வாழ விரும்பவில்லை. அவள் மனம் அறிந்த சங்கரர், அவள் நிலையை மாற்ற, தாம் சாரதாபீடம் தோற்றுவிக்கும் வேளையில் அதில் ஆரோஹணம் செய்து அருள்பாலிக்க கேட்டுக் கொண்டார்.

❒❒❒

# 12. அருளாசிகள்...

சாரசவாணியை வாதத்தில் வென்ற பிறகு, சங்கரர் பாரதம் முழுதும் திக்விஜயம் செய்து அத்வைதக் கொள்கையைப் பரப்பி வந்தார்.

தவறான மதக் கொள்கையுடையவர்களோடு வாதிட்டு வென்றார். அன்றைய நாளில் பாரத தேசத்தில் எழுபத்திரண்டு சமயங்கள் நடைமுறையில் இருந்தன.

அவற்றில் வேத நெறியுள்ள ஆறு மதங்களை மட்டும் அங்கீகரித்து ஷண்மதம் என்று நிறுவினார். ஷண்மதம் என்றால் ஆறு மதம்.

அவை காணபத்யம், கௌமாரம், சைவம், வைஷ்ணவம், சாந்தம், சௌரம் என்பனவாகும்.

சைவ, வைஷ்ணவ வேதம் நீக்கி பக்தி, கர்மம் இவற்றைத் தழுவிக் கொண்ட ஞானநெறியைப் பரப்பினார்.

மதக் கொள்கைகளைப் பரப்பிக் கொண்டு நாடு முழுதும் விஜயம் செய்து கொண்டு வந்த சங்கரர், பிரயாகைக்கு வந்து சேருகிறார்.

அப்போது, சங்கரர் நதிக்கரையில் நடந்து கொண்டு இருந்தார்.

அப்போது, அங்கிருந்த ஒரு பெரிய ஆலமரத்தில் ஓர் இளைஞன் தூக்கிட்டு இறக்க முயற்சி செய்வதைக் கண்டார், சங்கரர்.

பதறியபடியே அங்கே ஓடிய சங்கரர், தொழுநோயின் துன்பத்தால் இறக்க எண்ணிய இளைஞனைக் காத்து நின்று, அவன் உடலை, தன் மலர் போன்ற கைகளால் தடவிக் கொடுத்தார்.

அக்கணமே, அவ்விளைஞனின் நோய் நீங்கிற்று. அவன் மகிழ்வோடும், நன்றியோடும் சங்கரரை வணங்கி நின்றான்.

சங்கரர் அவனுக்கு ஆசி வழங்கி, தன் சீடரில் ஒருவராக ஆக்கிக் கொண்டார். அன்று முதல் அவன் உதங்கர் என்ற திருநாமத்தோடு அழைக்கப் பெற்றான்.

ஒருமுறை கௌசாம்பி என்ற நகருக்கு தம் சீடர்களோடு சென்றடைந்தார், சங்கரர்.

அப்போது அந்நகர வீதியில் ஒரு தாயும், தந்தையும் கண்ணீரும் கம்பலையுமாய், தலைவிரி கோலத்தோடு இறந்து விட்ட தங்கள் ஒரே மகனின் உயிரற்ற உடலைச் சுமந்து கதறி அழுது கொண்டிருந்தனர்.

மகனைப் பிரிந்து சோகச் சுமையோடு நின்று இருந்த பெற்றோரின் நிலை கண்ட சங்கரரின் உள்ளம் வாடி, வதங்கியது. அப்பெற்றோரின் பெரும் துன்பத்தை எண்ணி, இறைவனை வேண்டி அழுதும் தொழுதும் நின்றார்.

இறைவன் அருள் பாலித்தார். இறந்தவன் உயிர் பெற்று எழுந்து நின்றான்.

அங்கே, வீதியில் கூடி நின்று பார்த்துக் கொண்டு இருந்த மக்கள் சங்கரரின் அற்புதச் செயலை - அதிசயத்தைப் போற்றி வணங்கி நின்றனர்.

❑

இதே நகருக்கு முன்பு ஒரு சமயம் புத்தர் வந்திருந்தபோது, தாய் ஒருத்தி, ''என் மகன் இறந்துவிட்டான், அவனுக்கு உயிர் பிச்சை அளியுங்கள்'' என்று வேண்டி நின்றாள்.

அத்தாயிடம், ''தாயே...! இந்த ஊரில் இதுவரை ஒருவரும் இறக்காத வீட்டில் சென்று ஒரு பிடி கடுகு வாங்கி வந்தால், நான் உமது மகனை எழுப்பித் தருகிறேன்'' என்று கூறினார்.

தாயும் பிள்ளைப் பாசத்தோடு வீதி வீதியாக, வீடு வீடா அலைந்தாள்; திரிந்தாள்; இறந்தவர் இல்லாத வீடே இல்லை என்ற நிலையில் திரும்பி வந்தாள். நிலைமையைச் சொன்னாள்; நீர் வழிய நின்றாள்.

அதைக் கண்டு புத்தரும் அங்கிருந்து மௌனமாய்ச் சென்றார்.

அந்த நகரில்தான் தற்போது, சங்கரர் ஒரு இளைஞனை உயிர்ப்பித்துக் காட்டி நின்றார்.

❑❑❑

# 13. அறநூல் காத்தார்....

**ச**ங்கரர் காலத்தில் சமணம் ஓங்கி இருந்தது. அம்மதத்தை தழுவி நின்றான் அமரசிம்மன் என்பவன்.

அவன் உதட்டால் உச்சரிப்பதோ சமணம். ஆனால் உள்ளத்துள்ளே வணங்கி நிற்பதோ சரஸ்வதி தேவியை. அவளின் பரம பக்தனாகவே இருந்தான். ஒருநாள் அவன் சங்கரரை வாதத்திற்கு அழைத்தான். வாதத்தை விரும்பாதவரா சங்கரர்...? மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்.

வாதிடும் நாள் குறிப்பிடப்பட்டது. அமரசிம்மன், தான் திரைக்குப் பின்னே இருந்துதான் வாதம் தொடுப்பேன் என்கிறான். அப்படியே ஆகட்டும் என்கிறார், சங்கரரும்.வாதமேடையில், திரைக்குப் பின்னே அமரசிம்மன் குடத்தில் ஒரு விளக்கை ஏற்றி சரஸ்வதியை அதில் ஆவாஹணம் செய்து வாதம் செய்யத் தொடங்கினான்.

அதனால், சங்கரர் கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் அட்டியின்றி பதில் சொல்லிக் கொண்டு இருந்தான். வியப் படைந்தார் சங்கரர். சந்தேகப் புயல் அவர் சிந்தனையை உரச, விழிப்படைந்த சங்கரர், சரஸ்வதி தேவியை தம்முள் கொண்டு வந்து நிறுத்தி வணங்கினார்.

என்ன ஆச்சர்யம்...! இருவருக்கும் இடையே இருந்த திரைச் சீலை அறுந்து வீழ்ந்தது. அமரசிம்மன் அதிர்ச்சியுற்றான், அவமானப்பட்டான். அவசரமாய் அடுக்களையில் நுழைந்து தீ மூட்டினான். அதில் தான் அதுவரை எழுதி வைத்திருந்த ஏடுகளை எல்லாம் எடுத்தான். ஒவ்வொன்றாய் தீயிக்குத் தீனியாய் போட்டுக் கொண்டு இருந்தான்.

அங்கே விரைந்து சென்ற சங்கரர் அவன் 'தீச்செயலை'த் தடுத்து நின்றார். அவனிடம் எஞ்சியிருந்தது. 'அமரகோசம்' என்ற நூல் ஒன்று மட்டுமே. அதைக் காப்பாற்றி உலகிற்குத் தந்தார், சங்கரர். அந்நூலே இன்னும் வடமொழி அகராதியாக இருந்து வருகிறது.

அமரசிம்மனிடம் வாதத்தில் வெற்றி பெற்ற நிலையில் சங்கரர் அங்கிருந்து தம் சீடர்களோடு ஆந்திராவிலுள்ள ஸ்ரீசைலத்திற்கு விஜயம் செய்தார்.

□□□

# 14. தேகமும் தெய்வமும்

அந்நகரில் கபாலிகர்கள் மிகுதியாக வாழ்ந்து வந்தனர்.

அவர்கள் நரமாமிசத்தைத் தின்று சுடுகாட்டில் குடிகொண்டு இருப்பவர்கள்.

நீண்ட சடைமுடியோடும், கழுத்து அணிகளாக மண்டை ஓடுகளையும் அணிந்து பார்ப்பதற்கு பயங்கரத் தோற்றத்தோடு இருப்பார்கள்.

இவர்கள் சிவனைத் துதித்து நரபலி கொடுத்து மகிழ்ந்து வந்தனர்.

இக்கொடிய சடங்கு முறைகளை அருள் உள்ளம் கொண்ட, கருணைக் கடலான சங்கரர் கண்டித்தார்.

எங்கள் கொள்கையில் யார் இவர் தலையிட என்று கோபம் கொண்டான் உக்கிர பைரவன் என்ற கபாலிகன்.

இந்த நிலையில் ஒரு நாள்... சீடர்கள் எல்லாம் வெளியில் சென்ற நிலையில், தனிமையில் இருந்த சங்கரர், தியானத்தில் மூழ்கியிருந்தார்.

தனிமையில் இருந்த சங்கரரை வெட்டி வீழ்த்த வாளுடன் அங்கே வந்து சேர்ந்தான், கபாலிகன்.

சங்கரர் தியானத்தில் இருப்பதைக் கண்டு சற்று தயங்கினான். தியானத்தில் இருக்கும் அவரை வெட்ட விரும்பவில்லை.

மனித மாமிசம் தின்னும் அவனுக்குள்ளும் ஈர இதயம். இதுதான் கல்லுக்குள் ஈரம் என்பதோ....?

அதே வேளையில் சங்கரர் கண் மலர்ந்தார்.

கண் மலர்ந்த சங்கரரைக் கண்ட கபாலிகன் கையில் வாளினை ஏந்தியபடியே நின்று பேசினான்.

"பன்னிரண்டு ஆண்டுகளாக விரதம் இருந்து வருகிறேன். உக்கிர பைரவர் என் உயிர் தெய்வம். அவருக்கு உயிர் பலி கொடுக்க வேண்டும். விரதம் முடிக்க வேண்டும். அதனால் உன்னைப் போன்ற அங்கஹீனம் இல்லாத ஒரு மனிதனைப் பலி

தந்தால், என் தெய்வம் அருள் புரிவார். அதன் பொருட்டுதான் நான் இங்கு வந்தேன்'' என்றான் கபாலிகன்.

சங்கரர் இதழ்களில் புன்னகை தவழ... ''அன்பனே! என் தேகம் உன் தெய்வத்திற்குப் பயன்பட போகிறதா? எனக்கு மிகவும் மகிழ்ச்சி. உன் எண்ணம் போல் என்னை பலியிடு. அதற்கு நான் சம்மதிக்கிறேன்.''

''தாங்கள் மன நிறைவோடு ஒப்புதல் தராமல் நான் உங்களை பலியிட்டால், எனக்கு பலன் கிட்டாமல் போய்விடும். அதனால், சொல்கிறேன். மீண்டும் சிந்தித்து சொல்லுங்கள்...'' என்று தயங்கியபடியே கேட்டான்.

''அன்பனே! என் முடிவில் மாற்று சிந்தனை ஏதுமில்லை. மரம் பட்டால் விறகு. மனிதர் உயிர் விட்டால் பிணம் என்றுதான் எண்ணியிருந்தேன். பயனற்று போகும் இந்த உடல் என்றிருந்தேன். பரமனுக்கு இப்போது பயன்படப் போகிறதே என்பதை எண்ணி அகம் மகிழ்கிறேன். உள்ளம் குளிர நீ என்னை பலியிட ஒப்புதல் அளிக்கிறேன். சீடர்கள் வருவதற்குள் என் சிரசை கொய்துவிடு. நான் தியானத்தில் ஆழ்கிறேன்'' எனச்சொல்லி, தியானத்தில் அமர்ந்தார், சங்கரர்.

சங்கரரின் மனமறிந்த கபாலிகன் மகிழ்ந்து போனான். உக்கிர பைரவர் இப்படி ஒரு உயர்ந்த நரபலியை பெற்றிருக்க மாட்டார். பெறற்கரிய பேற்றினை நாம் பெறப் போகிறோம் என்ற நிலையில், முன்பே கூர்மையோடு இருந்த வாளில் மேலும் கூர்மை ஏற்றினான். கையில் ஏந்தினான்; வாளை ஓங்கி வீசினான்....

அங்கே... அப்போது... 'ஆ...' என்று ஓங்கார ஒலி எழுந்து, காடு, மலை எங்கும் எதிரொலித்தது....

ஒலி கேட்டு விழி திறந்தார் சங்கரர்.

கண்ணெதிரே கபாலிகன் நார்நாராக கிழிக்கப்பட்டுக் கிடந்தான்.

அங்கே, ஆத்திரத்தோடும், ஆவேசத்தோடும் சீடர் பத்மபாதர் நின்றிருந்தார்.

சங்கரருக்கு சகலமும் புரிந்துபோயிற்று.

''பத்மபாதருக்கு எப்படி இந்த ஆற்றல் வந்தது....?'' கேட்டார் சங்கரர்.

கடந்த காலத்தில் போய் நின்றார், பத்மபாதர்....

❐

**சோ**ழவள நாட்டில் சனந்தராக இருந்த வேளையில் ஒரு முனிவர் நரசிம்ம மந்திரத்தை அவருக்கு உபதேசித்தார்.

சனந்தரும் அந்த மந்திரத்தை அகோபிலம் என்ற மிருகங்கள் நிறைந்த காட்டில் அமர்ந்து நரசிம்ம மந்திரத்தை கண் மூடி ஜெபித்துக் கொண்டு இருந்தார்.

அந்த நேரம் அங்கே ஒரு வேடன் வந்தான்.

வில், அம்போடு விலங்குகளை காட்டில் வேட்டையாட வந்தவன், தாடி, மீசையோடு காட்டில் அமர்ந்து இருக்கும் ஞானியைக் கண்டு நின்றான்; நினைத்தான்.

'சிங்கமும், புலியும் அலையிற இந்தக் காட்டில், இந்த ஆளு கண்ண மூடிகிட்டு இப்படி உக்காந்து இருக்காரே. ஏன் இப்படி உக்காந்து இருக்கிறார்? பாம்பு, தேளு கடிக்க வந்தா என்ன பண்ணுவாரு? ஐயோ பாவம்!'

''ஏய், பெரியவரே, ஏன் இங்கே உக்காந்து இருக்கே?'' அவன் மொழியில் கேட்டான்.

''நீர் யார்...?'' கேட்டார்.

''அம்பையும், வில்லையும் கையில் வைத்துக் கொண்டு இருக்கும் என்னைப் பார்த்து என்ன கேள்வி இது? நான் ஒரு வேடன். அதாவது, மிருகங்களை வேட்டையாடுபவன். அது சரி, நீ யாரு...?''

''நானும் உன்னைப் போல ஒரு மிருகத்தைத் தேடி வந்தவன்தான்...'' என்றார், ஞானி.

அதைக்கேட்டு சிரித்தான், வேடன்.

''ஏனப்பா சிரிக்கிறாய்...??''

''சிரிக்காமல் என்ன செய்ய?''

''விலங்கைப் பிடிக்க வந்தேனு சொல்றே, கண்ண மூடிகிட்டு உக்காந்து இருந்தா அது உன்னைப் பிடிச்சுக்கிட்டுப் போயிடாதா, அதான் சிரிச்சேன்... அது சரி, நீ என்ன மிருகத்தைப் பிடிக்க வந்த?'' கேட்டான், வேடன்.

''நான் தேடிக் கொண்டு இருப்பது ஒரு விசித்திரமான விலங்கு....?'' என்றார், ஞானி.

''என்ன விசித்திரமான விலங்கா? அது எப்படி இருக்கும் சொல்லு. இந்த வயதான காலத்துல உனக்கு பிடிச்சு வந்து கொடுக்கிறேன்...'' என்றான், வேடன்.

''உண்மையாகவா...?'' கேட்டார், ஞானி.

''உண்மையாத்தான், அந்த மிருகம் எப்படி இருக்குன்னு மட்டும் நீ சொல்லு. அதை நான் உன் முன்னாலே கொண்டு வந்து நிறுத்துறேன்னு'' சொன்னான், வேடன்.

''அந்த மிருகத்தின் மேல் பகுதி சிங்கமாகவும், உடல் பகுதி மனிதனைப் போலவும் இருக்கும்...'' என்றார், ஞானி.

அதைக்கேட்டு அவன் திகைத்துப் போனான். 'நம் வாழ்நாளில் இப்படி ஒரு மிருகத்தைப் பார்த்தது இல்லியே! பெரியவர் பொய் சொல்லமாட்டார்' என்று வேடன் நம்பினான்.

''சரி, பெரியவரே, நீ சொன்ன மிருகத்தோட நான் வர்றேன்...'' என்று வேகமாக நடந்தான், வேடன்.

ஞானி, 'ஆண்டுகள் பலவாய் நான் நரசிம்ம மூர்த்தியைத் தேடிக் கொண்டு அலைகிறேன். காண முடியவில்லை. இவன் என்னடா வென்றால், இதோ போய் பிடித்து வருகிறேன் என்று சொல்லி போகிறானே' என்று உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டார், சனந்தனர்.

காடு, மலை எல்லாம் ஓடிப் பார்த்தான்; தேடிப் பார்த்தான்.

ஞானி சனந்தனர் சொன்னதுபோல் மிருகம் எங்கேயும் காணும்.

சோறு, தண்ணீர் கொள்ளாமல் அலைந்தான். இவை இப்போது அவனுக்குத் தேவையும் இல்லை என்று நினைத்தான்.

அவன் சிந்தனை எல்லாம் நரசிம்ம மிருகத்தைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

புதர்களையும், பள்ளத்தாக்குகளையும், குகைகளையும் ஒன்றுவிடாமல் சுற்றிப் பார்த்துவிட்டான்.

எங்கும் சனந்தனர் சொன்ன மிருகம் தென்படவே இல்லை.

மனம் சோர்ந்தான்; உடல் சோர்ந்தான். ஞானிகளின் முன்னே அவர் சொன்ன மிருகத்தைக் கொண்டு செல்லாமல் எப்படி செல்வது? அப்படி செல்வதைவிட நாம் உயிர்விடுவதே மேல் என்று எண்ணினான்.

தன் எண்ணப்படியே இறக்கத் துடித்தான். மரத்தில் தூக்குப் போட்டுக் கொள்ள, சுருக்குக் கயிற்றில் கழுத்தை நுழைத்தான்....

அந்த நேரம் ஓங்காரச் சிரிப்போடு ''ஏய் வேடனே, அந்த ஞானி கேட்ட மிருகம் நான்தான். என்னை அழைத்துச் செல்....''

தூக்குக் கயிற்றை அறுத்துப் போட்டுவிட்டு, ஞானி சொன்னதுபோல் அங்கே நின்றிருந்த விலங்கிடம் வந்தான்.

அங்கு படர்ந்து கிடந்த பிரம்புக் கொடிகளை அறுத்து கயிறாக்கி அதன் கழுத்திலே கட்டி, ஒரு முனையை தன் கையிலே பிடித்துக் கொண்டு, ஞானியை நோக்கி நடந்தான், கம்பீரத்தோடு வேடன்.

ஞானி சனந்தனர், விழி மூடி நரசிம்ம மந்திரத்தை ஜெபித்துக் கொண்டு இருந்தார்.

''அட, ஐயா! நீ எப்பவும் கண்ணை மூடிக்கிட்டுத்தான் இருப்பியா? நீ சொன்ன மிருகம் இதுதானா? கண்ணைத் தொறந்து பாத்து சொல்லு... வூடு வாசலைவுட்டு இதைத் தேடி அலைஞ்சது போதும்பா போதும்.... கண்ணைத் தொற....'' என்று அவர் முன்னே ஒரத்து குரல் கொடுத்து நின்றான்.

குரல் கேட்டு தன் மலர் விழிகளை மெல்லத் திறந்தார், ஞானி சனந்தனர்.

மனம் அதிர்ந்து போனார்; உடல் சிலிர்த்துப் போனார்.

இரவு, பகல் எந்நேரமும் இதயத்தில் அவன் நாமத்தை சொல்லிக் கொண்டிருந்த நமக்கு காட்சி தராமல், பறவைகளையும், விலங்குகளையும் வேட்டையாடி புலால் உண்ணும், வேதங்கள் ஏதும் அறியா ஒரு வேடனுக்கு காட்சி தந்ததோடு, அவன் கட்டி இழுத்து வரவும் கட்டுப்பட்டாரே என்று வேதனைப்பட்ட சனந்தனர், எதிரே இருந்த நரசிம்ம மூர்த்தியைக் கேட்டார்.

''வேடனால் என்னைக் காண முடியாது என்று அவனை இழிவாகப் பார்த்தாய். ஆயிரம் ஆண்டுகள் என்னை வேண்டுவதை விட இவன் வேடனாக இருந்தும், செய்யும் தொழில் வேறானதாக இருந்தும் உண்மையான பக்தியுடனும், அன்புடனும், உம்மிடம் கூறிய கடமை உணர்வோடும்; எந்தவித பயனையும் எதிர்பாராமல் தேடியதனால்; எனைக்காண வாடியதனால் இவனின் அன்பு வலையில் சிக்கினேன். கடவுள் அருளுக்கு குல வேறுபாடு இல்லை'' என்று மொழிந்தார், நரசிம்மர்.

அடுத்த கணத்திலேயே வேடனும் நரசிம்மரும் மறைந்தனர். என்று பழங்கதையைக் கூறி நின்றார், பத்மபாதர்.

நரசிம்மர் கோபத்தின் காரணமாகத்தான் கபாலிகனை பத்மபாதர் அழித்தார் என்பதை, குருநாதர் சங்கரர் அறிந்து கொண்டார்.

❐❐❐

# 15. ஆதி பீடம்

பின் அங்கிருந்து தம் சீடர்களோடு மகாபலீசுவரர் கோயில் கொண்டுள்ள கோகர்ண திருத்தலத்தை அடைந்தார்.

அடுத்து ஹரிஹர திருத்தலம் சென்றார். பிறகு அங்கிருந்து மூகாம்பிகை என்ற சக்தி தலத்திற்குச் சென்று அங்கு ஸ்ரீசக்ரப் பிரதிஷ்டை செய்து தேவியின் உக்கிரத்தைத் தணித்தார்.

சங்கரர் துங்கபத்திரை நதிக்கரையோரம் நடந்து போய்க் கொண்டிருந்தபோது ஒரு அரிய காட்சியைக் கண்டு வியப்போடு நின்றார்.

கர்ப்பிணியான தவளை ஒன்றின் மீது வெயில் சுட்டெரிக்காத வாறு ஒரு நச்சுப் பாம்பு படம் விரித்து குடை பிடித்திருந்தது. இக்காட்சிதான் சங்கரரை வியப்படைய வைத்தது.

மாமுனி - ரிஷ்ய சிருங்கர் அந்த நகரில் இருந்ததால் சிருங்ககிரி என்ற பெயர் பெற்றது. அந்த இடம் அவருக்கு மிகவும் பிடித்துப் போனது.

அதனால், வனதுர்க்கா மந்திரத்தால் முன்பு கட்டுப்படுத்திய சரசவாணி ஆகிய சாரதையின் - திருவுருவத்தை அங்கு பிரதிஷ்டை செய்தார். அதன் பின், அங்கே ஒரு மடத்தை நிறுவி அதன் பொறுப்பை சுரேசு ஆசாரியாரிடம் நிறுவகிக்க ஒப்படைத்தார்.

கர்நாடக மன்னன் சுதன்வா செய்த உதவிகளை மரியாதை நிமித்தமாக சங்கரர் ஏற்றுக்கொண்டார்.

பின் யஜுர் வேதத்தின் அதிகார பீடமாகச் சிருங்கேரி மடம் நிறுவப்பட்டது.

சங்கரர், ஆதிசங்கரர் என்ற சிறப்புக்கும் பெருமைக்கும் உரியவரானார்.

சிருங்ககிரியில் ஆதிசங்கரர் நீண்ட நாள் இருந்து உபதேசம் செய்து கொண்டிருந்தார்.

□□□

# 16. வார்த்திகச் சுவடி....

பத்மபாதர் சேது யாத்திரையை மேற்கொண்டு காஞ்சி சிதம்பரம் வழியாக தன் தாய் மாமன் இருந்த திருவானைக்காவலை அடைந்தார்.

சில நாள் அங்கே தங்கி இருந்துவிட்டு, சேது யாத்திரை தொடங்கு முன்னும், தன்னிடம் இருந்த வார்த்திகச் சுவடியை தன் மாமா விரும்பி கேட்டதால் அவரிடம் கொடுத்துச் சென்றார்.

கர்ம மார்க்கத்தில் அதிக நம்பிக்கைக் கொண்ட பத்மபாதரின் தாய் மாமன் அந்த ஏடுகளை எல்லாம் அழித்து ஒழிக்க எண்ணம் கொண்டு செயல்பட்டார்.

அந்த ஏடுகளை அழிக்க வேண்டும் அதேநேரம், அழித்த சுவடுகள் ஏதும் தெரிந்துவிடக் கூடாது. அதற்கு எப்படி நாம் செயல்பட வேண்டும் என்று சிந்திக்கலானார்.

சிந்தித்தார்... சுவடிகளை நெருப்பிற்கு இரையாக்குவது என்று.

வீட்டில் இருந்து சுவடிகளை மட்டும் எரித்தால் மற்றவர்களுக்கு சந்தேகம் வந்துவிடும்!

அப்படி என்றால்... சுவடிகளை வீட்டோடு சேர்த்து கொளுத்தி விட்டால்....!

கொடூரமாக சிந்தித்து முடித்தார்.

அதன்படியே சுவடிகளோடு வீட்டையும் தீயிட்டு அழித்து, மகிழ்ந்தார்.

அத்தோடு அவர் நின்றாரா. அதுதான் இல்லை. அதே போன்று மீண்டும் எழுதிவிடாதபடி, ஆபிசாரப் பிரயோகமும்' செய்து மகிழ்ந்தார்.

சேது யாத்திரை முடித்து மாமன் ஊர் வந்து சேர்ந்ததும், அவரிடம் கொடுத்துச் சென்ற வார்த்திகச் சுவடியைக் கேட்க, 'வீடே பற்றி எரிந்து போனதால் சுவடிகளும் எரிந்து போய்விட்டது' என்று அழகாக கதை சொல்லி முடித்துவிட்டார்.

அதைக்கேட்ட பத்மபாதர் துடித்துப் போனார். பின் அவர் வேதனை நெருப்பில் வெந்தபடியே அங்கிருந்து தன் குருநாதரை நோக்கிப் பயணப்பட்டார்.

# 17. குடியிருந்த கோயில்....

**சி**ருங்ககிரியில்...

சீடர்களின் இடையே சங்கரர் அமர்ந்து உரையாற்றிக் கொண்டு இருந்தாலும் ஆதிசங்கரரின் உள்ளத்தில் ஏதோ சலனம் ஏற்பட்டுக் கொண்டே இருநதது.

அவர் நெஞ்சில் நிழலாய் ஒரு முகம் வந்து வந்து போனது.

அவருக்குள்ளே, இனமறியா போராட்டம் நடந்து கொண்டே இருந்தது. என்றுமே சிதறாத அவரின் சிந்தனைகள் அடிக்கடி சிதறிக் கொண்டிருந்தன.

சீடர்களின் நடுவே அமர்ந்திருந்த ஆதிசங்கர் 'திடு'மென்று எழுந்தார்.

ஏதும் பேசாத நிலையில் கேரளாவில் உள்ள அழகிய கிராமமான காலடியை நோக்கி நடந்தார். அவருக்கு முன்பே அவரின் ஆன்மா அங்கே சென்று சேர்ந்தது.

காவி உடுத்தியவர்கள், கமண்டலம் ஏந்தியவர்கள், தண்டம் ஏற்றவர்கள் தங்களது முன் உறவைப் பற்றி நினைத்தல் கூடாது என்பது பொதுவிதி.

பெற்ற தந்தையானாலும் மகன் துறவு நிலை கொண்டால், வணங்க வேண்டும் என்பது நியதி.

ஆனால், துறவு நிலை ஏற்றவர் தன் தாயை வணங்கி - வழிபட வேண்டும் என்பது சிறப்பு விதியாகும்.

இத்தகையச் சிறப்புகளுக்குரிய தாய், விரிந்தும், பரந்தும் கிடந்த அப்பெரிய வீட்டில் பாயோடும், நோயோடும், தண்ணீரில் இருந்து பிடுங்கிப்போட்ட அல்லிக் கொடியாக வாடி வதங்கிக் கிடந்தார், ஆதிசங்கரரின் தாய், ஆர்யாம்பிகை.

அவரது நினைவு விட்டு விட்டு விடை பெற்றுக் கொண்டு இருந்தன.

மகன் சங்கரனைக் கண்ட தாய், தன் மகனைக் கண்டாள் என்று கூறுவதைவிட, மீண்டும் பிறந்தாள்; சிறந்தாள் மகிழ்ந்தாள் என்று கூறுவதே சிறப்பாகும். உண்மையாகும்.

ஊர், உலகே போற்றுபவன் தன் மகன், ஆனால், தன்னை தனியே தனிமையில் வாடவிட்ட மகன், இப்படி அந்தத் தாய்மை எண்ணுவதில் தவறு ஏதுமில்லை. எண்ணினாள் இதயம் கசிந்தாள்....

மூச்சு முட்டியது. முகத்தில் உள்ள சுருக்கங்கள் சுருங்கி விரிந்தன.

இப்போது பேச்சு வரவில்லை. மூச்சுக்கும் முட்டுக்கட்டை, விழிகள் அந்தித் தாமரையாகிக் கொண்டிருந்தன. அவளுக்குத் தண்ணீர் வேண்டும். தொண்டைக்குழி வறண்டு போயின. அவள் ‘தண்ணீர் வேண்டும்’ என்பதைக் குறிக்க விரல்களை நீட்டினாள்.

குறிப்பை உணர்ந்த குணாலனின் கைகள் நீரை ஏந்தின.

நீர் சுமந்த கையை நீர் வழிந்த கண்களோடு மெல்லத் திறந்து பார்த்தாள் தாய்.

‘‘சங்கரா...!’’ தாய்மையின் வெளிப்பாடாய் வார்த்தை மெலிதாய் வந்தது.

தாயைத் தாங்கிப் பிடித்து மடியில் கிடத்திக் கொண்டு, ‘‘அம்மா, என்னைத் தெரிகிறதா?’’ வீட்டில் உறவுகள் கூடியிருந்தன. இல்லை ஆர்யாவின் அந்திமக் காலத்திற்குப் பின் அவளது திரண்ட சொத்தை பங்குபோட கழுகுகளாய் காத்திருந்தார்கள். துறவியான சங்கரருக்கு ஏன் சொத்து? திட்டமிட்டே வட்டமடித்துக் கொண்டிருந்தார்கள்.

‘‘யார் இவர்கள்?’’

தாய்க்கு பார்வை குறைந்துவிட்டது என்பதை உணர்ந்தார், சங்கரர்.

‘‘மகனே...! முன்னே முதலையிடம் இருந்து தப்பி என்னை விட்டு சூர்ணா ஆற்றிலிருந்து ஈரத்துணியோடு பிரிந்து போனாயே.... உனக்கு ஒண்ணும் உடம்புக்கு ஆகலியே....’’

எத்தனை ஆண்டுகள்....? எத்தனை பருவங்கள்? இன்னும் ஈரமாய் தாயின் இதயம். அன்னையின் அன்பில் ஆழ்ந்து போனார்.

தன் மகன் பிரிவு காலத்தில் சொன்னதுபோல் வந்துவிட்டானே என்பது தாய்மைக்குப் பெருமையாக இருந்தது.

ஆர்யாம்பிகையின் நினைவுகள் அவ்வப்போது நீர்க் குமிழிகளாய் தோன்றித் தோன்றி மறைந்தன.

தாயின் இறுதி நிலையை உணர்ந்து கொண்டார், மகன், சங்கரர்.

தாய் சிவபதம் அடைய மகன் பிரார்த்தனை செய்தார்.

ஆர்யாம்பிகையின், உயிர் பறந்தது....!

உறவு ஓனான்கள் அவரது உடலைச் சூழ்ந்து கொண்டன. இருக்கும் பொருளடைய போட்டியிட்டன. அவரது உடலை எரி மூட்டிட.

தன் தாயை தீ மூட்ட சூழ்ந்த சூழ்ச்சிக்காரர்களைத் தீ பரவப் பார்த்தார்.

தாயைத் துறந்தவருக்கு உறவை மறந்தவர்க்கு இறுதிக் கடனை செய்தவர்க்கும் உரிமை இல்லை என்று வாதிட்டனர் உறவுகள்.

''என் தாயின் வாக்கை காப்பாற்றவே நான் இங்கே வந்துள்ளேன். இதில் எவர்க்கும் உரிமை இல்லை....'' சங்கரர் மனம் திறந்தார்.

உறவு என்று சொல்லி வந்த ஓணான்கள் ஓடி மறைந்தன.

மாளிகை போன்ற அந்த வீட்டில் இப்போது...

ஆர்யாம்பிகை, என்றுமே எழமுடியாத நிலைக்காகி, உயிரற்ற நிலை நீங்கா துயிலில் ஆழ்ந்து கிடக்கிறார்.

அன்னையின் முகத்தைப் பார்த்தபடியே சங்கரர் நிற்கிறார். தனிமை, தனிமை!

இந்த உலகம் இவ்வளவுதானே...? மனிதப் பண்புகளே மடிந்து மண்ணோடு மண்ணாகிவிட்டனவா...?

அவரின் இதயம் விம்மி தணிந்தது!

தான் குடியிருந்த கோயிலை, தன்

தோளில் சுமந்தார்.

அங்கே மந்திரங்கள் ஒலிக்கவில்லை.

அழுகை பிறக்கவில்லை.

குருத்தோலை ஆடவில்லை.

குடம் தூக்கவில்லை.

தாயோடு நடந்தார்; தனியே நடந்தார்; வீட்டைக் கடந்தார்; தோட்டம் அடைந்தார். தாயின் பூத உடலை பூமியில் வைத்தார், நிமிர்ந்தார்.

''இறைவா! இந்த உலகில் எல்லாவற்றிற்கும் மேலான என் அன்னையின் உடலை உனக்கே அளிக்கிறேன். ஏற்றுக்கொள்க!'' என்று அக்கினி தேவனை ஆதிசங்கரர் வேண்டி நின்றார்.

அக்கினிதேவன் அடுத்த நொடியே அக்கினியாய் சிரித்தான்; ஆர்யாம்பிகையின் மேனியைத் தொட்டான்; சுடர் விட்டு எரித்தான்; குளிர்ந்தான்!

❐❐❐

# 18. அருள் நதி நடந்தது...

ஆதிசங்கரரின் ஆன்மிகப் பணி தொடர்ந்தது. திருவனந்தபுரம் சென்றார். அங்கு எழுந்தருளியுள்ள ஆனந்த பத்மநாபரை மனம் மகிழ வணங்கினார். வெளியே வந்தார்.

அதே நேரம் வார்த்திகச் சுவடிகளை தன் மாமனிடம் கொடுத்து ஏமாந்துபோன சீடர் பத்மபாதர் சங்கரரின் காலடியில் வந்து பணிந்து வணங்கி நின்றார்.

அவரை எழுப்பி நின்ற குரு ஆதிசங்கரர் என்ன என்பதுபோல் நோக்கினார்.

வார்த்திகச் சுவடிகளை தன் தாய் மாமனிடம் கொடுத்து ஏமாந்ததைக் கூறினார்.

ஆதிசங்கரர் சிரித்துக் கொண்டார்... பின், ''கவலை கொள்ளாதே, நீ எழுதியதில் முதல் அத்தியாயத்தில் நான்கு பாதத்தையும், இரண்டாம் அத்தியாயத்தில் முதல் பாதத்தையும் என்னிடம் படித்துக் காட்டியது என் நினைவில் உள்ளது. சொல்கிறேன் எழுதிக்கொள்....'' என்று சொல்ல வியப்போடு குருவின் நினைவாற்றலை மனதிற்குள்ளேயே போற்றியபடியே எழுதத் தொடங்கினார்.

பிற்காலத்தில் அது 'பஞ்சபாதிகை' என்ற திருநாமத்தோடு அழைக்கப்பட்டது. சிருங்ககிரியில் பீடத்தின் முதல் பீடாதிபதியாக பிரித்வீதம் என்பவரை அமர்த்தினார்.

பின் அத்வைத மடங்களை நாட்டில் நான்கு திசைகளிலும் நிறுவ முனைந்தார்.

சீடர்களுடன் சிதம்பரம் வந்தார். அங்கே அன்னகர்ஷண யந்திரத்தை தோற்றுவித்தார். திருவிடமருதூர் சென்றார். இங்கு 'சிவானந்தலகரி' என்ற நூலை எழுதினார்.

அங்கு எழுந்தருளியிருக்கும் மஹாலிங்கேஸ்வரர் 'அத்வைதமே சத்தியம்' என்று அசரீரி வழியே காட்டினார்.

திருச்சியிலுள்ள ஜம்புகேஸ்வரி கோயிலிலுள்ள அகிலாண்டேஸ்வரியின் உக்கிரத்தைத் தணித்தார்.

இப்படி ஸ்ரீரங்கம், மதுரை, கன்னியாகுமரி போன்ற இடங்களில் எல்லாம் இயந்திர பிரதிஷ்டை செய்தார்.

இப்படியே வடநாட்டிலும் செய்தார்.

கோரக்கர் என்பவர் சித்தர். இவர் நேபாளத்தில் கன்னிகேஸ்வரி ஆலயத்தில் இருந்து வந்தார்.

இவருடன் ஆதிசங்கரர் வேதவாதம் புரிந்து வெற்றி பெற்றார்.

பிறகு சங்கரர் திருக்கைலாயத்திற்குச் சென்றார். இறைவனை வணங்கினார். அது போழ்து சங்கரரிடம் ஐந்து ஸ்படிக லிங்கங்களை இறைவனே நேரில் அளித்தார்.

அவற்றில் ஒன்றான முக்தி லிங்கத்தை பத்ரிகாசிரமத்தில் பிரதிஷ்டை செய்தார். வரலிங்கத்தை நேபாளத்திலும், மோட்ச லிங்கத்தை சிதம்பரத்திலும், போக லிங்கத்தை சிங்ககிரியிலும் யோகலிங்கத்தை காஞ்சியிலும் பிரதிஷ்டை செய்தார்.

இப்படி பாரதம் முழுதும் ஆன்மிக பயணம் செய்த ஆதிசங்கரர், இறுதியில் காஞ்சி வந்தடைந்தார்.

காஞ்சி, ஆலயங்கள் அதிகம் உள்ள நகரம். அப்புனிதம் அறிந்த ஆதிசங்கரர், காஷ்மீரில் உள்ளதைப்போல 'சர்வக்ஞ பீடம்' ஒன்றை தோற்றுவிக்க பெரிதும் விரும்பினார்.

அதே வேளையில் மன்னனான ராஜசேனன், அவரது விருப்பப்படி விஷ்ணு காஞ்சிக்கும் சிவகாஞ்சிக்கும் நடுவே காமாட்சியம்மன் கோயிலை எழுப்பித்தான்.

காஞ்சியில் ஸ்ரீகாமகோடி பீடத்தை சங்கரர் தோற்றுவித்தார். நான்கு பீடங்களுக்கும் மூலஸ்தான பீடமாக்கினார்.

காஞ்சி மடத்திற்கு ஸ்ரீசாரதா மடம் என்ற பெயரையும் சூட்டி மகிழ்ந்தார்.

ஆதிசங்கரர் பல நூல்களை எழுதினார். தம் வாழ்வில் பல வெற்றிகளைக் கண்டார்.

அவர் தம்முடைய முப்பத்திரண்டாவது அகவையில் காஞ்சி சாரதா மடத்தில் அங்கு திரண்டு இருந்த மக்களுக்கு அத்வைத கருத்துக்களை சொல்லிக் கொண்டிருந்தார்.

இறுதியில் திரிபுரசுந்தரி வேத பாதஸ்தவம் என்ற துதிப் பாடல்களை பாடிக் கொண்டே இருந்தார். ஒளி வடிவாய் காமாட்சி அன்னையின் மலரடி சேர்ந்தார்!

❑❑❑



- சம்பாதிக்க வேண்டியவை எவை?
  கல்வி, செல்வம், புண்ணியம்.

- உண்மையான உழைப்பின் துணையைக் கொண்டு நியாயமாகக் கிடைப்பதை நன்கு அனுபவிக்கும் மனோபலத்தை வளர்த்துக் கொண்டவருடைய வாழ்க்கை சுவையுடையதாக இருக்கும்.

- திட வைராக்கியம் இல்லாதவர்களை ஆசை என்னும் முதலை கவ்வி மூழ்கடித்து விடுகிறது. ஆசை என்னும் முதலையை வைராக்கியம் என்னும் வாளால் எவர் கொல்கிறாரோ, அவராலேயே பிறவிக் கடலைக் கடக்க முடியும்.

- உடல், மனம், சகலத்திலும் மறைந்தும், கலந்தும் இருக்கும் ஆத்மாவை எவர் அறிகிறாரோ, அவரே துன்பமில்லாத, எதற்கும் அஞ்சாத அறிவாளி ஆவார்.

நிவேதிதா
புத்தகப் பூங்கா